வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 07.07.2021 புதன்கிழமை | இதழ் : 216 | பக்கங்கள் : 16






# பஸில் நாளை காலை சத்தியப்பிரமாணம்?

## தேர்தல் ஆணைக்குழு இன்று கூடுகிறது

கொழும்பு, ஜூலை 07

சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ நாளை வியாழக்கிழமை காலை பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளார் எனத் தெரியவருகின்றது.

இந்தத் தகவலை பொதுஜன பெரமுன உறுப்பினர் ஒருவரும் உறுதிப் படுத்தினார். 15

## பின்வரிசை எம்.பிக்களை சந்திக்கின்றார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூலை 07

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆளும் கட்சியின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார்.

இந்த சந்திப்பு எதிர்வரும் திங் 15



## 13, 16ஆவது திருத்தங்களை அரசாங்கம் கைவிட்டுவிட்டது

### இந்திய தூதுவருடனான சந்திப்பில் மனோ

கொழும்பு, ஜூன் 07

“இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் குழந்தைகள் தான் 13ஆம் திருத்தம், 16ஆம் திருத்தம் என்பவை ஆகும். இன்று இந்த இரண்டையும் இலங்கை அரசு கைவிட்டு விட்டது. 13ஆம் திருத்தம் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண 15

## நீண்ட நாட்களின் பின்னர் சபைக்கு வந்த சம்பந்தன்

கொழும்பு, ஜூலை 07

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட எம்.பி.யுமான இரா.சம்பந்தன் நீண்ட நாட்களின் பின்னர் பாராளுமன்றத்துக்கு நேற்று செவ்வாய்க்கிழமை சக்கர நாற்காலியில் வருகை தந்தார்.

பாராளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபே 15

## மணல் கொள்ளையரின் தாக்குதலில் அதிரடிப்படையினர் நால்வர் காயம்!

### அரியாலையில் நேற்று அதிகாலை சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 07

அரியாலை பகுதியில் மணல் கொள்ளையர்களுக்கும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பில் நான்கு பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, மணல் கொள்ளையர்கள் இருவர் கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அரியாலை கிழக்கு 15

## காலாவதியான சட்டங்களை திருத்துவதற்கு நடவடிக்கை

### சபையில் நீதியமைச்சர் தகவல்

கொழும்பு, ஜூலை 07

நாட்டில் காலாவதியான அனைத்து சட்டங்களையும் திருத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக நீதி அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார். 15

## கொரோனா தொற்றால் மேலும் 45 பேர் மரணம்!

கொழும்பு, ஜூலை 07

இலங்கையில் மேலும் 45 கொரோனாத் தொற்றாளர்கள் உயிரிழந்தனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்த்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 15 பெண்களும், 30 ஆண்களும் உள்ளடங்குகின்றனர். இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 313 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## சிறிதரன் கூறியது பொய்!

### பிரதமர் அலுவலகம் மறுப்பு

கொழும்பு, ஜூலை 07

யாழ்ப்பாணத்தில் சில பகுதிகள் சீனாவுக்கு விற்கப்படவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கூறியது பொய்யான தகவல் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நெடுந்தீவில் 40 ஏக்கர் நிலமும், ஒல்லாந்தர் கால கட்டடமான பழைய யாழ்ப்பாணச் கச்சேரியும் சீனாவுக்கு விற்கப்பட இருப்பதாக தமிழ் தேசிய கூட்டமைப் 15

## யாழ். நகரில் சனியன்று கவனவீர்ப்பு போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 07

உணவுப் பொருட்கள் - எரிபொருட்களின் விலைகளை உடனே குறை, விவசாயிகள் - மீனவர்கள் எதிர்கொள்ளும் 15

## அமெரிக்க காங்கிரஸ் தீர்மானத்தை சாதாரணமாக எடுத்துவிடாதீர்கள்!

### அரசை எச்சரிக்கிறார் லக்ஷ்மன் கிரியெல்ல

கொழும்பு, ஜூலை 07

வடக்கு-கிழக்கை தமிழர்களின் பூர்வீக பூமியாக அங்கீகரிக்கவேண்டும் என்ற அமெரிக்க காங்கிரஸில் தீர்மானத்தை அரசாங்கம் சாதாரண விடயமாக எடுத்துவிடக்கூடாது 15

## உள்ளூராட்சி சபைகளில் ஒப்பந்த ஊழியர் 8,000 பேருக்கு விரைவில் நிரந்தர நியமனம்

கொழும்பு, ஜூலை 07

உள்ளூராட்சி மன்றங்களில் சாதாரண அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதை அரசு விரைவுபடுத்தும் என்று பொதுச் சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தற்போது அமைய மற்றும் 15




## அரசின் செயல்பாடுகளே இலங்கையை சர்வதேச நெருக்கடிக்கு உள்ளாக்கியது

### பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டிய ஹக்கீம்



கொழும்பு, ஜூன் 07

அரசாங்கத்தின் செயல்பாடுகளே சர்வதேச ரீதியில் இலங்கையை நெருக்கடிக்குள் கொண்டு சென்றுள்ளன என்று சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் எம்.பி.யுமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற குற்றவியல் நடவடிக்கைமுறைச் 15

# இப்படியும் நடக்கிறது...!

ஒரு கல்லூரி மாணவர் விடுதியில் காலை உணவாக தினமும் உப்புமாவையே வழங்கிக் கொண்டிருந்தனர்.

மாணவர்கள் தினமும் உப்புமாவையே சாப்பிடுவதால் வெறுப்படைந்திருந்தனர். விடுதி பொறுப்பாளருடன் அடிக்கடி தர்க்கப்பட்டுவந்த மாணவர்கள் பொறுமை இழந்து போராட்டத்தில் குதித்துவிட்டனர்.

மாணவர்களின் போராட்டத்தை எப்படியாவது முடிவுக்கு கொண்டுவர கல்லூரி நிர்வாகம் முயற்சி செய்தது. வழக்கம்போல மாணவர் தலைவர்களை அழைத்து பேச்சு நடத்தியும் பலன் கிடைக்கவில்லை.

கல்லூரி நிர்வாகம் ஒரு முடிவுக்கு வந்தது.

மாணவர்கள் மத்தியில் வாக்கெடுப்பை நடத்தி காலையில் என்ன உணவை சமைப்பது என்று முடிவெடுக்க தீர்மானிக்கப்பட்டது.

மாணவர்களிடையே வாக்கெடுப்பு. ஒவ்வொருவரும் காலை உணவாக எதை விரும்புகிறார்கள் என்பதைக் கண்டறிய அந்த வாக்கெடுப்பு.

மொத்தம் இருந்த நூறு மாணவர்களில் இருபது பேர் இடியப்பம் தேவை என்றனர். மேலும் இருபத்தி ஐந்து பேர் புட்டு வேண்டும் என்றனர். இப்படியே இருபது பேர் தோசை வேண்டும் என்றனர். முப்பது பேர் உப்புமாவே பரவாயில்லை என்று தெரிவித்திருந்தனர்.

கடைசியாக அதிக மாணவர்களின் விருப்பத்தின் பேரில் உப்புமாவையே காலை உணவாக தொடர்வதாக கல்லூரி நிர்வாகம் முடிவுசெய்தது.

ஒன்றை மாற்றவேண்டும் என்றால் அதற்காக மாற்றத்தை விரும்புபவர்கள் முதலில் ஒற்றுமைப்படவேண்டும்.

தமிழ்த் தலைமைகள் ஒற்றுமைப்படவேண்டிய தன் அவசியத்தை இந்தப் பத்தியில் பல தடவைகள் வலியுறுத்தியிருந்தோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் பெரும்பான்மையினரின் தெரிவுக்குரிய கட்சியாக இதுவரை இருந்தாலும் அது ஏகப்பிரதிநிதித்துவத்துக்குரிய கட்சி அல்ல என்பதையும் மிக அண்மையில் வலியுறுத்தியிருந்தோம்.

இந்த நிலையில் திடீரென்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ, தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபட முன்வந்ததுடன் இதற்காக ஒரு சந்திப்புக்கும் அழைப்பு விடுத்திருந்தது.

ஒற்றுமை என்பது அவசியமான காலத்தில், அவசரமாக செய்யப்படவேண்டிய காலத்தில் நாம் இருப்பதால் யார் முன்னெடுத்தாலும் அது நல்லதுதான்.

ஆனால், இத்தகைய வரலாற்று முக்கியத்துவம் மிக்க பணியை ஒரு கட்சி முன்னெடுப்பது எந்த வகையிலும் சாத்தியமாகப்போவதில்லை.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மூன்று கட்சிகளும், குறிப்பாக இதன் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருமே ஒற்றுமையாக தமிழர் அரசியலை முன்னெடுத்துச் செல்கிறார்களா என்பதை முதலில் ரெலோ தலைவர் தமிழ் மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும்.

அதைவிட முக்கியமானது, கூட்டமைப்பிலுள்ள அனைவரும் (தலைவர் சம்பந்தன் உட்பட) உங்கள் முயற்சிக்கு ஆதரவு வழங்குவார்கள் என்று, எந்த நம்பிக்கையில் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளீர்கள் என்பதையும் தெளிவுபடுத்தவேண்டும்.

நாம் மேலே சொன்னதுபோல ஒற்றுமை அவசியமானதுதான் ஆனால், அதனை இந்த கட்சிகள் முன்னெடுப்பதை விடுத்து, அனைவருக்கும் பொதுவான- சிவில் சமூகத்தினர் முன்னெடுக்கவேண்டும். அதுவே அவசியமானது மட்டுமல்ல, அவசரமானதும் கூட.!

**- ஊர்க்குருவி**

# "கல்விக்காக அதிக நேரத்தை ஒதுக்க வேண்டும்"

கொழும்பு, ஜுலை 07,

தனியார் தொலைக்காட்சிகள் ஏற்கனவே ஒளிபரப்பிய நாடகங்கள், படங்களை மீள ஒளிபரப்புவதை நிறுத்தி அந்த நேரத்தி கல்விக்காக ஒதுக்க வேண்டும் எனக்கோரிக்கை விடுத்த கல்விச் சீர்திருத்தங்கள்,



திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, கொரோனா தொற்று நிலைமையால் வீடுகளில் இருக்கும் மாணவர்களுக்கு தொலைக் கல்வியை வழங்கும் நோக்கில் ஒவ்வொரு வகுப்புகளுக்குமென 16 தொலைக்காட்சி அலைவரிசைகளை ஆரம்பிக்க நடவடிக்கையெடுக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால் நிலையியல் கட்டளை 27/2 இன் கீழ் தொலைக் கல்வி முறை தொடர்பாக எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவிக்கையில்,

"நான் இந்த அமைச்சுப் பொறுப்பை ஏற்ற பின்னர் அரச மற்றும் தனியார் தொலைக்காட்சிகளின் அலைவரிசை பிரதானிகளுடன் கலந்துரையாடினோம். இதன்படி சனல் ஐ ஊடாக தற்போது கற்றல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் அவை இடம் பெறுகின்றன. தேசிய அலை வரிசைகளில் நஷ்டத்துடனும் அந்த நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன" எனவும் அவர் குறிப்பிட்டார்.

**கல்வி tv CHANNEL-1**

**07.07.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

# சமூக சேவையாளருக்கு இறுதி அஞ்சலி நிகழ்வு

அம்பாறை, ஜுலை 07,

கொரோனாவால் உயிரிழந்த காரைதீவைச்சேர்ந்த பிரபல சமூக சேவையாளர், தேசமான்ய விபுல நேசன் லயன் சின்னதம்பி தங்கவேலுக்கு (வயது 75) ஆத்மார்த்த பிரார்த்தனையும், இறுதி அஞ்சலி நிகழ்வும் காரைதீவில் நடைபெற்றது.

காரைதீவு விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் மாலை இந் நிகழ்வு, சுகாதாரமுறைப்படி நடைபெற்றது. அன்னார் நேற்று முன்தினம் காலை 5.30 மணியளவில் இறைபதமடைந்தார். அன்றுமாலை 4.30மணியளவில் அம்பாறையில் அவரது பூதவுடல் தகனம்செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மன்றத்தின் உபதலைவர் சோ.ஸூரநுதன் தலைமையில், பணிமன்றத்தின் முன்னாள் தலைவர் வி.ரி.சகாதேவராஜாவின் நெறிப்படுத்தலில் இந்நிகழ்வு மன்றச்செயலாளர் கு.ஜெயராஜியின் ஒழுங்கமைப்பில் நடைபெற்றது.

நிகழ்வில் தவிசாளர், ஆலயத் தலைவர்கள், பணிமன்றத்தினர் என மட்டுப்படுத்தப்பட்டளவில் சில பிரமுகர்கள் கலந்துகொண்டனர். முன்னதாக சிவபுராணம் ஓதப்பட்டு, அன்னாரின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, புஸ்பாஞ்சலி செலுத்தப்பட்டது. இராமகிருஸ்ண பாரம்பரியத்தின்படி தீட்சைபெற்ற அன்னாருக்கு, பாராயணம் ஓதி பஞ்சராத்தி காட்டப்பட்டது.

**கல்வி tv CHANNEL - 2**

**07.07.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
07.07.2021 புதன்கிழமை
பிலவ வருடம், ஆனி 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: editor@eelanadu.lk,**
**news@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# பஸிலின் ஆட்டம்?

பஸில் ராஜபக்ஷ பாராளுமன்றம் வருவதற்காக, பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயந்த கொட்டேகொட பதவி விலகியிருக்கின்றார். இதன் மூலம் பஸில் ராஜபக்ஷ பாராளுமன்றம் வரவுள்ளமை உறுதியாகியுள்ளது. பஸில் ராஜபக்ஷ வருவதால் நாட்டில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுவிடப் போவதில்லை. ஆனால், பெரிய மாற்றங்கள் ஏற்படும் என்றவாறான தோற்றம் காண்பிக்கப்படுகின்றது. ஒருவேளை பஸில் சில விடயங்களில் மாற்றங்களை காண்பித்தாலும்கூட, அவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இயலாமையாகவே நோக்கப்படும். ஒருவேளை நல்ல விடயங்கள் இடம்பெற்றால், அவை அனைத்திற்கும், பஸில் தான் காரணம் என்னும் பார்வையே சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படும்.

இவ்வாறானதொரு சூழலில்தான், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு நெருக்கமான அமைச்சரும், பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான பிவித்துஹெல உறுமயவின் தலைவருமான உதய கம்மன்பிலவிற்கு எதிராக நம்பிக்கை இல்லா பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது.

கம்மன்பிலவிற்கு எதிரான நம்பிக்கை இல்லா பிரேரணையின் போது, பொதுஜன பெரமுன எவ்வாறு நடந்து கொள்ளும் என்பதிலும் தெளிவற்ற நிலைமையே காணப்படுகின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகள் தங்களுக்குள் ஒரு கூட்டை ஏற்படுத்திக்கொள்ள முயற்சிக்கின்றன. ஒருவேளை பங்காளிக் கட்சிகள் அரசாங்கத்திலிருந்து வெளியேறும் நிலைமை ஏற்பட்டால் என்ன நடக்கும்? அரசாங்கத்திற்கு எந்தவொரு பிரச்னையும் ஏற்படப் போவதில்லை. ஆனால், மூன்றில் இரண்டு பெரும்பாண்மையை அரசாங்கம் இழக்கும்.

பஸில் ராஜபக்ஷ இதனை வேறுவிதமாகக் கையாள வாய்ப்புண்டு. அதவாது, தற்போது அரசாங்கத்திற்கு வெளியில் இருக்கும் முஸ்லிம் கட்சிகளை பஸில் அரவணைக்கலாம். பஸில் ராஜபக்ஷ பாராளுமன்றம் வரவுள்ள நிலையில் பொதுபல சேனாவின் தலைவர் ஞானசார தேரர், இஸ்லாமிய அடிப்படை வாதத்தின் அச்சுறுத்தலிருந்து நாடு இன்னும் விடுபவில்லை - என்று தெரிவித்திருக்கும் விடயத்தையும் இந்த இடத்தில் குறித்துக்கொள்ள வேண்டும்.

பஸில் ராஜபக்ஷவின் வரவுடன் அமைச்சரவையில் சில மாற்றங்கள்கூட ஏற்படலாம். ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஒரு தனிச் சிங்கள அரசாங்கம், சிறுபான்மைகளை புறக்கணித்திருக்கும் அரசாங்கம் என்னும் அபிப்பிராயம் இருக்கின்ற நிலையில், இந்த முகத்தை மாற்றுவதற்கு பஸில் முயற்சிக்கலாம். இந்த அடிப்படையில் முஸ்லிம் அரசியல்வாதிகள் மீளவும், அரசாங்கத்திற்குள் உள்வாங்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே உண்டு.

ஏற்கனவே முஸ்லிம் காங்கிரஸ் 20ஆவது திருத்தச்சட்டத்திற்கு ஆதரவு வழங்கியிருந்தது. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. ஆனால், கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருமே ஆதரவாக வாக்களித்திருந்தனர். அரசாங்கத்துடன் ஒத்துப் போவதற்காக முஸ்லிம் காங்கிரஸ் மேற்கொண்ட தந்திரோபாய நடவடிக்கையாகவே இதனை நோக்க வேண்டும். இந்த அனுபவத்தின் அடிப்படையில் சிந்தித்தால், ஒருவேளை, பஸில் முஸ்லிம் தலைவர்களை அணுகினால் அவர்கள் நிச்சயம் பஸிலின் கையை கெட்டியாகப் பிடித்துக்கொள்வார்கள்.

விடயங்களை தொகுத்து நோக்கினால் பஸில் ராஜபக்ஷவின் வரவின் பின்னர், அரசாங்கத்தின் முகம் மாறுவதற்கு வாய்ப்புண்டு. ஆனால், பஸிலின் நகர்வுகளுக்கு ஜனாதிபதி கோட்டாபய ஒத்துழைக்காமல் விட்டால் அரசாங்கம் மேலும் சிக்கல்களை எதிர்கொள்ளக் கூடும்.

# தாலிபன்கள் குறித்து அமெரிக்க சமீபத்தைய மதிப்பீடு என்ன?



*கடந்த 2001ஆம் ஆண்டு, அமெரிக்கா தலைமையிலான பாதுகாப்புப் படையினரால் ஆப்கானிஸ்தானின் அதிகாரத்தில் இருந்து தலிபான்கள் அகற்றப்பட்டனர். தலிபான் குழுவினர் மெல்ல தங்கள் பலத்தை அதிகரித்துக் கொண்டு, மீண்டும் ஆப்கானிஸ் தானின் பல நிலப்பகுதிகளை கைப்பற்றத் தொடங்கி இருக்கின்றனர்.*

*அமெரிக்கா, எதிர்வரும் செப்ரெம்பர் 11ஆம்திகதிக்குள் கடந்த இருபது ஆண்டுகளாக ஆப்கானிஸ்தானில் நிலை நிறுத்தி இருக்கும் அமெரிக்க துருப்புகளை முழுமையாக பின்வாங்க திட்டமிட்டுள்ளது.*

*இந்த நிலையில், தலிபான்கள் மீண்டும் ஆப்கானிஸ்தானின் அரசை கவிழ்த்து ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றலாம் எனவும் அச்சம் நிலவிக் கொண்டு இருக்கிறது.*

*கடந்த 2018ஆம் ஆண்டு தலிபான் குழுக்கள் அமெரிக்கா உடன் நேரடியாக பேச்சு வார்த்தையில் ஈடுபட்டது. கடந்த பெப்ரவரி 2020இல் இரு தரப்பும் டோஹாவில் ஓர் அமைதி உடன்படிக்கை எட்டப்பட்டது.*

*அதில் அமெரிக்கா தன் துருப்புகளை ஆப்கானிஸ்தானில் இருந்து பின் வாங்குவதாகவும், தலிபான்கள் அமெரிக்க துருப்புகளின் மீது தாக்குதல் நடத்தக் கூடாது எனவும் கூறப்பட்டு இருந்தது.*

*மேலும், அல்-கொய்தா போன்ற மற்ற தீவிரவாத அமைப்புகளை, தலிபான் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் எல்லைக்குள் இருந்து செயல்பட அனுமதிக்கக் கூடாது எனவும், ஆப்கானிஸ்தானின் தேசிய அமைதிப் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ள வேண்டும் எனவும் கூறப்பட்டு இருந்தது.*

*ஆனால் தலிபான் படைகள், ஆப்கானிய பாதுகாப்புப் படைகள் மற்றும் மக்களை தொடர்ந்து இலக்கு வைத்து தாக்கியது. தற்போது அமெரிக்கா தன் துருப்புகளை பின் வாங்கி வருவதால், ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆதிக்கம் அதிவேகமாக நாடு முழுவதும் அதிகரித்து வருகிறது.*

*பெப்ரவரி 2020 அமெரிக்கா தலிபான் அமைதிப் பேச்சு வார்த்தைக்குப் பிறகு, தலிபான் சிக்கலான தாக்குதல் நடத்துவதை கைவிட்டது. நகரங்கள் மீது, ராணுவ தளங்கள் மீது தாக்குதல் நடத்துவதை விடுத்து, தனி மனிதர்களை இலக்கு வைத்து தாக்கத் தொடங்கியது.*

*பத்திரிகையாளர்கள், நீதிபதிகள், அமைதி செயற்பாட்டாளர்கள், அதிகாரத்தில் இருக்கும் பெண்கள் என இலக்கு வைத்து தாக்கத் தொடங்கியது. இது தலிபான்கள் தங்களின் தீவிரவாத கொள்கையில் இருந்து மாறவில்லை என்பதைக் காட்டுகிறது.*

*வெளிநாட்டுப் படைகள் இல்லையெனில், ஆப்கானிஸ்தான் அரசாங்கத்தை தலிபான்கள் கைப்பற்றிவிடலாம் என ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் தங்கள் கவலையை வெளிப்படுத்தி இருக்கின்றனர். இதற்கு மத்தியில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கடந்த ஏப்ரல் 2021இல், வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் ஒட்டுமொத்த அமெரிக்க துருப்புகளும் பின்வாங்கப்படும் எனக் கூறினார்.*

*ஏற்கனவே பல்வேறு நாட்டுப் படைகளும் ஆப்கானிஸ்தானில் இருந்து பின்வாங்கத் தொடங்கிவிட்டன. எனவே தாலிபன்கள் பல்வேறு நிலப்பகுதிகளை ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளனர். மீண்டும் அரசைக் கலைத்து விடுவோம் என அச்சுறுத்தத் தொடங்கியுள்ளது தலிபான் அமைப்பு.*

*நேட்டோவின் மதிப்பீடுகள் படி, தற்போது 85,000 முழு நேர போராளிகள் தலிபானில் உள்ளனர். அவர்கள் கட்டுப்பாட் டின் கீழ் உள்ள நிலப்பகுதிகளை வரையறுப் பது கடினம்.*


*இருப்பினும் ஆப்கானிஸ்தானின் ஒட்டு மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு முதல் ஐந்தில் ஒரு பங்கு வரை தலிபான்கள் வசம் இருக்கலாம் என சமீபத்தைய கணிப்புகள் கூறுகின்றன.*

*பலரும் எதிர்பார்த்ததை விட அதிவேகமாக தலிபான்களின் விரிவாக்கம் இருக்கிறது. ஆப்கானிஸ்தான் மோசமான உள்நாட்டுப் போரை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக, அமெரிக்க படைகளை வழி நடத்திய ஜெனரல் ஆஸ்டின் மில்லர் என்பவர் கடந்த ஜூன் மாதம் எச்சரித்தார். மேலும் இது ஒட்டு மொத்த உலகத்துக்கே கவலையளிப்பதாக அமையலாம் எனவும் கூறியுள்ளார்.*

*அதே மாதம் வெளியான அமெரிக்காவின் புலனாய்வு மதிப்பீட்டு அறிக்கையில், அமெரிக்க ராணுவம் ஆப்கானிஸ்தானை விட்டுச் சென்ற பிறகு, அடுத்த ஆறு மாத காலத்துக்குள், ஆப்கானிஸ்தான் அரசு கவிழ வாய்ப்பு இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.*

*நன்றி: பி.பி.சி*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜுலை - 07 புதன்கிழமை
பிலவ வருடம் - ஆனி 23
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : திரையோதசி




07.07.2021

**மேடம்**
சில நாட்கள் இருந்து வந்த உளைச்சல் காணாமல் போகும். முயற்சி ஒன்றில் வெற்றி காண்பதால் நிறைவு வரும். நட்பில் கசப்பு ஏற்படாதபடி கவனமாக இருங்கள்.

**இடபம்**
முனைப்புடன் உழைத்து நன்மையடைவீர்கள். நேற்று இருந்த கவலை இன்று இல்லை. குழந்தைகள் வெல்வார்கள். ஆரம்பித்துப் பாதியிலேயே நின்ற பணி முடியும்.

**மிதுனம்**
நீங்கள் மதிப்பவர்களின் ஆதரவு உங்களுக்கு கிடைக்கும். நிதியைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்பு உருவாகும். உறவுகளிலிருந்த கசப்புகள் மாறும். பயம் நீங்கும்.

**கடகம்**
வரவேற்கத்தக்க மாற்றம் நிகழும். கவனமாக பேசவும். மனதில் மகிழ்ச்சி கூடும். எதிலும் வெற்றி காண்பீர்கள். கருத்து வேற்றுமை நீங்கும். வேதனை குறைய ஆரம்பிக்கும்.

**சிம்மம்**
வரவேற்கத்தக்க மாற்றம் நிகழும். கவனமாக பேசவும். மனதில் மகிழ்ச்சி கூடும். எதிலும் வெற்றி காண்பீர்கள். கருத்து வேற்றுமை நீங்கும். வேதனை குறைய ஆரம்பிக்கும்.

**கன்னி**
ஆடம்பர பொருள் வாங்குவீர்கள். உடல்நலத்தில் கவனம் தேவை. நண்பர்/ தோழி சந்திப்பால் நன்மை அடைவீர்கள். விருந்து நிகழ்ச்சியில் பங்கேற்பீர்கள். அதிகாரி ஆதரவு உண்டு.

**துலாம்**
வீண் செலவு ஏற்படலாம். பழைய கவலை மறையும். எதிர்பார்த்த முன்னேற்றம் காணக் கூடுதலாக உழைப்பீர்கள். தற்காலிக சிக்கல்களும், சிறு பிரச்னைகளும் ஏற்படும்.

**விருட்சிகம்**
பக்கபலமாக இருப்பவர்கள் விலகினால் கவலை வேண்டாம். பேச்சினால் பிரச்னை வராமல் கவனமாக இருக்க வேண்டும். குழந்தைகளால் கவலை தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**தனுசு**
அலுவலகத்தில் அதிகக் கவனம் தேவை. மன உற்சாகம் கூடும். தொழில், வியாபாரத்தில் கலைஞர்களின் திறமை பளிச்சிடும். உற்சாகமாக இருப்பீர்கள். சிறிதளவு லாபம் அதிகரிக்கும். செல்வாக்கு கூடும்.

**மகரம்**
சிலருடன் சண்டைகள் வந்தாலும் உடனடியாகத் தீரும். வருமானத்தை உயர்த்த முயற்சிகளை மேற்கொள்வீர்கள். மறதியால் ஏற்பட்ட பிரச்னை விலகும். அதிர்ஷ்டமான நாள்.

**கும்பம்**
சிறு ஆதாயம் உண்டு. வெளி நாட்டிலிருந்து நல்ல செய்தி வரும். அக்கம் பக்கத்தினரிடம் அனுசரித்து நற்பெயர் காண்பீர்கள். வாடிக்கையாளர்களிடம் இனிமையாக நடப்பது நல்லது.

**மீனம்**
பொறுப்புடன் உழைத்து வெற்றி பெறுவீர்கள். வேலை தேடுபவர்களுக்கு நல்ல செய்தி உண்டு. சேமிப்பு உயரும். மின்னணு சாதனம் மூலம் நன்மை கிடைக்கும்.

# 7 தமிழர் விடுதலை விவகாரத்தில் சட்ட சிக்கலை உருவாக்க முயற்சி

## தமிழக சட்டத்துறை அமைச்சர் ரகுபதி குற்றச்சாட்டு

மதுரை, ஜுலை 07

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிக்கி 30 வருடமாக சிறைவாசமிருக்கும் 7 தமிழர்களின் விடுதலை விவகாரத்தில் நிறைய சட்ட சிக்கல்களை உருவாக்கப் பார்க்கிறார்கள்.என்று தமிழக சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தெரிவித்தார்.



தமிழக சட்டத்துறை அமைச்சர் ரகுபதி நேற்று முன்தினம் மதுரை மத்திய சிறைக்கு சென்று ஆய்வு மேற்கொண்டார். அவருடன் அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், மதுரை மாவட்ட கலெக்டர் அனீஸ்சேகர், சிறைத்துறை டி.ஐ.ஜி.பழனி, சிறைத்துறை சூப்பிரண்டு தமிழ்ச்செல்வன், எம்.எல்.ஏ.க்கள் தளபதி, பூமிநாதன் உள்ளிட்டோரும் உடன் சென்றனர்.

தண்டனை கைதிகள், விசாரணை கைதிகள் தங்குமிடம், சமையல் அறை, மருத்துவ அறை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு நேரில் சென்று அமைச்சர்கள் ஆய்வு செய்தனர். மேலும் அங்குள்ள கைதிகளிடம் கோரிக்கைகளை கேட்டறிந்தனர். பின்னர் வெளியே வந்த அமைச்சர் ரகுபதி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

“ஏழு தமிழர் விடுதலை விவகாரத்தில் தமிழக ஆளுநர், ஜனாதிபதிக்கு அறிக்கை அனுப்பி உள்ளார். இந்த விவகாரத்தில் கடந்த ஆட்சியில் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி அந்த தீர்மானத்தின் மீது கவர்னர் உரிய முடிவு எடுக்காமல் காலம் தாழ்த்தினார். தற்போது அது ஜனாதிபதி கையில் உள்ளது. அவரை இதில் நிர்ப்பந்திக்க முடியாது.

7 தமிழர் விடுதலை விவகாரத்தில் நிறைய சட்ட சிக்கல்களை உருவாக்க பார்க்கிறார்கள். முதலமைச்சர் ஸ்டாலின் இதில் எந்த சிக்கலிலும் சிக்கிக்கொள்ள மாட்டார்.” எனவும் அவர் தெரிவித்தார்.

# பாதிரியார் ஸ்டான் லூர்துசாமி மரணம் சட்டத் துணையுடன் செய்த படுகொலை

## திருமாவளவன் அறிக்கை



சென்னை, ஜுலை 07

“பாதிரியார் ஸ்டான் லூர்துசாமியின் மரணம் பா.ஜ.க அரசு சட்டத்தின் துணையோடு செய்த படுகொலை” என விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருக்கின்றார்.

இது தொடர்பில் அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

“ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஆதிவாசிகளுக்காக பணியாற்றிக் கொண்டிருந்த ஸ்டான் லூர்துசாமி என்ற கத்தோலிக்க பாதிரியார் கடந்த ஆண்டு பா.ஜ.க. அரசு பொய்யான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கைது செய்தது. பீமா கோரேகான் என்னுமிடத்தில் நடைபெற்ற வன்முறையோடு அவரைத் தொடர்புபடுத்தி அவரை சிறையில் அடைத்தது.

இந்தநிலையில் பாதிரியார் ஸ்டான் லூர்துசாமி உயிரிழந்தார் என்ற செய்தி பேரதிர்ச்சி அளிக்கிறது. இதை கொரோனா மரணமாகக் கருதமுடியாது. மாறாக, பா.ஜ.க. அரசு சட்டத்தின் துணையோடு செய்திருக்கும் படுகொலையென்றே கூறவேண்டும். பா.ஜ.க. அரசின் இந்த சட்டம்சார் பயங்கரவாதத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம். இதை ஜனநாயக சக்திகள் வேடிக்கை பார்க்கக் கூடாது. இந்த மனித தன்மையற்ற கொடுஞ்செயலைக் கண்டிப்பதற்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் குரல் கொடுக்க வேண்டும்” என அவர் கூறியுள்ளார்.

# மேகதாது விவகாரம் குறித்து தமிழகம் கர்நாடகாவிடம் கலந்து பேசி முடிவு

## மத்திய அமைச்சர் தமிழக அமைச்சருக்கு தெரிவிப்பு

புதுடில்லி, ஜுலை 07

தமிழகத்துக்கும் கர்நாடகத்துக்கும் இடையில் சர்ச்சையை உருவாக்கியுள்ள மேகதாது விவகாரம் குறித்து தமிழக மற்றும் கர்நாடக அரசுகளுடன் கலந்து பேசிதான் முடிவு மத்திய அமைச்சர் ஷெகாவத்தை தமிழக அமைச்சர் துரைமுருகனுக்குத் தெரிவித்துள்ளார்.

தமிழகத்துக்கும், கர்நாடகத்துக்கு இடையே காவிரி நீரை பகிர்ந்து கொள்வது தொடர்பாக பிரச்சினை இருந்து வருகிறது. இந்த நிலையில் காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்ட கர்நாடக அரசு முயற்சித்து வருகிறது. இதற்கு தமிழகம் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இந்த நிலையில், இவ்விவகாரம் குறித்து பேசுவதற்காக தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் புதுடில்லி சென்றுள்ளார். டில்லியில் நேற்று மத்திய அமைச்சர் ஷெகாவத்தை சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்புக்கு பிறகு செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த துரைமுருகன் கூறியதாவது:-

உச்சநீதிமன்ற உத்தரவின்படி காவிரியில் இருந்து தமிழகத்திற்கு உரிய நீர் திறக்க வேண்டும். காவிரியின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்டும் கர்நாடகாவின் முயற்சியை தடுக்க வேண்டும். தமிழக அரசிடம் ஒப்புதல் பெறாமல் கர்நாடகா மத்திய அரசிடம் அனுமதி பெற்றது தவறு.

காவிரி மேலாண்மை ஆணையத்திற்கு நிரந்தரமாக ஒரு தலைவரை நியமிக்க கோரியுள்ளோம். தமிழகம்-கர்நாடகாவிடம் கலந்து பேசிதான் முடிவு எடுப்போம் என மத்திய அமைச்சர் கூறியுள்ளார். கர்நாடகா ஒப்புதல் வாங்கி விட்டதால் மட்டும் மேகதாது அணை கட்டிவிட முடியாது ஷெகாவத் கூறினார்” என்றார்.

# கொரோனா தொற்றில் இருந்து மேலும் 1,717 பேர் குணமடைவு

கொழும்பு, ஜூலை 07
நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 1,717 பேர் குணமடைந்துள்ளனர்.
இதனை அடுத்து கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 36 ஆயிரத்து 659 ஆக உயர்ந்துள்ளது.
நாட்டில் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள 2 இலட்சத்து 66 ஆயிரத்து 499 நோயாளர்களில் 3, 268 பேர் உயிரிழந்துள்ளனர்.

# மட்டக்களப்பு மாவட்டத்துக்கு 50ஆயிரம் சினோபார்ம் தடுப்பூசி

மட்டக்களப்பு, ஜூலை 07
கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு 50ஆயிரம் சினோபார்ம் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் எம்.அச்சுதன் தெரிவித்தார்.
மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்றாம் கட்ட கொவிட் தடுப்பூசி வழங்கும் பணிகள் நேற்று காலை முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும் சுமார் 28 நிலையங்களில் நேற்று கொவிட் தடுப்பூசிகள் வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.
மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 60வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் முதல் கட்டமாக தடுப்பூசிகள் வழங்கப்பட்டுவருவதாக பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் மு.அச்சுதன் தெரிவித்தார்.
இதேநேரம், சுகாதாரப் பணியாளர்கள் பணிபகிஸ்கரிப்பு போராட்டத்தினை முன்னெடுத்துள்ள நிலையிலும் நேற்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கொவிட் தடுப்பூசிகள் ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.
(அ)

# இலங்கை முழுவதுமே டெல்டா வியாபிக்கும் அச்சுறுத்தல்நிலை

## ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை



**கொழும்பு, ஜூலை 07**
**டெல்டா திரிபு எதிர்காலத்தில் இலங்கை முழுவதும் வியாபிக்கும் அச்சுறுத்தல் உள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.**
இதேநேரம், நாட்டில் ஆயிரக்கணக்கானவர்கள் டெல்டா கொவிட் வைரஸ் திரிபினால் பாதிக்கப்பட்டிருக்கக் கூடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.
நாட்டில் தற்போது இடம்பெறும் சுகாதாரத் தரப்பின் போராட்டம் காரணமாக இந்த நிலைமை மேலும் மோசமடையக் கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.
எனவே மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

# 14 நாட்களுக்கு பின் திருமலையில் கண்டுபிடிக்கப்பட்ட 2 மீனவர்கள்

கொழும்பு, ஜூலை 07
காணாமற்போயிருந்த இரு மீனவர்களும் திருக்கோணமலை கடற்பகுதியில் இருந்து சுமார் 85 கிலோ மீற்றர் தொலைவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.
கடந்த 14 நாட்களாக காணாமல்போயிருந்த இரு மீனவர்களையும் தேடி வந்தநிலையில், இவர்கள் தொடர்பாக திருகோணமலையேச் சேர்ந்த ஆழ் கடல் மீன்பிடிப் படகு ஒன்றின் உரிமையாளர் தகவல் வழங்கியுள்ளார்.
அதனடிப்படையில் காணாமல்போயிருந்த இரு மீனவர்களும் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைக்கப்பெற்றுள்ள போதிலும் அவர்களின் நேரடித் தொடர்புகள் இது வரை கிடைக்கவில்லை என கூறப்படுகின்றது.
மேலும் காணமற்போயிருந்த இரு மீனவர்களினதும் படகின் உரிமையாளர் ஐயூப் கான், இந்த விடயம் தொடர்பாக கடற்படை மற்றும் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளதாக கூறியுள்ளார். இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# அடுத்த நான்கு மாதங்களுக்கு உரப் பற்றாக்குறை இருக்காது

## அமைச்சர் மஹிந்தானந்த கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 07
அடுத்த 4 மாதங்களுக்கு எந்தவொரு உரப் பற்றாக்குறையும் நாட்டில் இருக்காது என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே உறுதியளித்தார்.
நேற்று பாராளுமன்றத்தில் கருத்து தெரிவித்த அவர், சேமித்து வைக்கப்பட்டுள்ள அனைத்து உரப் பங்குகளையும் உடனடியாக விடுவிக்க சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு உத்தரவு பிறப்பித்ததாகவும் கூறினார்.
தற்போது 102,000 மெற்றிக் தொன் உரங்கள் கையிருப்பில்



உள்ளதாகவும் எவ்வாறாயினும், உரப் பற்றாக்குறை இருப்பதாக கூறி, பங்குகளை விவசாயிகளுக்கு விடுவிக்க அரசாங்கம் பிறப்பித்த உத்தரவுகளை நிறுவனங்கள் புறக்கணித்ததாகவும் அவர் தெரிவித்தார்.
இருப்பினும் நேற்று முன்தினம் இடம்பெற்ற நீண்ட கலந்துரையாடலின் பின்னர் ஒரு வாரத்துக்குள் விவசாயிகளுக்கு உரங்களை வழங்க, நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கூறினார்.
இதேவேளை, உர நெருக்கடி தொடர்பாக நாட்டின் பல வேறு பகுதிகளில் இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களுக்கு பின்னால் அரசியல் இருப்பதாகவும் இந்த விவகாரத்தை அரசியல்மயமாக்குவதைத் தவிர்க்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

# சமுர்த்தி நிவச வீடமைப்பு பயனாளியிடம் கையளிப்பு

மன்னார், ஜூலை 07
ஜனாதிபதியின் சிந்தனையில் உருவாக்கப்பட்ட 'சௌபாக்கியா வேளைத்திட்டத்தின்' கீழ் மன்னார் பிரதேச செயலர் பிரிவில் அரசாங்கத்தின் 6 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டிலும் பயனாளர்களின் பங்களிப்பிலும் அமைக்கப்பட்ட வீடு நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் வைபவ ரீதியாக உரிய குடும்பத்திடம் கையளிக்கப்பட்டது.
மன்னார் சாந்திபுரம் பகுதியில் அமைக்கப்பட்ட அந்த வீட்டை அதன் உரிமையாளருக்கு கையளிக்கும் நிகழ்வு மன்னார் நகர் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் தலைமையில் இடம் பெற்றது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல், மேலதிக அரசாங்க அதிபர் சிவ பாலன் குணபாலன், மன்னார் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.அலியார், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், உதவி திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி வங்கி முகாமையாளர், சாந்திபுரம் சமுர்த்தி உத்தியோகஸ்தர், கிராம அலுவலர்,அபிவிருத்தி உத்தியோகத்தர் என பலரும் கலந்து கொண்டு உரிய குடும்பத்துக்கு குறித்த வீட்டை கையளித்தனர்.
இந்த நிகழ்வில் சமுர்த்தி 'சிப்தொற' திட்டத்தின் கீழ் சாந்திபுரம் பகுதியில் வசிக்கும் 05 பாடசாலை மாணவர்களுக்கான 10 மாதங்களுக்கு தேவையான கல்வி ஊக்குவிப்பு தொகையும் சுய தொழில் முனைவோர் இருவருக்கு கடல் தொழில் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு என தல ஒரு இலட்சம் ரூபா வாழ்வாதார நிதி உதவியும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா தகவல்களை மறைக்க அரசிடம் எந்தத் திட்டமுமே இல்லை

## ரமேஷ் பத்திரண கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 07
தற்போதைய கொரோனா நிலைமை தொடர்பான தகவல்களை மறைக்கவேண்டிய அவசியம் இல்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.
நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே இணை அமைச்சரவைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரண இவ்வாறு கூறினார்.
சுகாதார அமைச்சின் ஊடாக அனைத்து தரவுகளும் பொதுமக்களுக்கு கிடைக்கும் என்றும் ரமேஷ் பத்திரண குறிப்பிட்டார்.
கொரோனா தொற்று நிலைமைகள் குறித்து சில வைத்தியர்கள் கருத்து தெரிவிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்திகள் குறித்து அவரிடம் கேள்வியெழுப்பப் பட்டது.
இதற்கு பதிலளித்த அவர், சுகாதார அதிகாரிகள் நிலைமை தொடர்பாக ஆராய்ந்து வருவ



தாகவும் தற்போது பரவும் டெல்டா மாறுபட்டு இருந்து பாதுகாக்க மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றவேண்டும் எனவும் கோரினார்.

# மைசூர் பருப்பு, சீனி இறக்குமதிக்கு அனுமதி

கொழும்பு, ஜூலை 07
மைசூர் பருப்பு மற்றும் வெள்ளை சீனி ஆகியவற்றை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.
அதன்படி, அந்தப் பொருட்களை சதொச மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் ஊடாக இறக்குமதி செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
உள்நாட்டில் அதிக விலைக்கு அந்த பொருட்களை விற்பனை செய்வதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.
இதற்கமைய இந்தியா மற்றும் அவுஸ்திரேலியாவில் இருந்து சீனி மற்றும் மைசூர் பருப்பை நேரடியாக இறக்குமதி செய்து விற்பனை செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.



## 777 கிலோ உலர்ந்த மஞ்சள் மன்னாரில் தீயிட்டு அழிப்பு

மன்னார், ஜூலை 07

சட்டவிரோதமான முறையில் இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக மன்னாருக்கு கடத்தி வரப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்ட ஒரு தொகுதி உலர்ந்த மஞ்சள் மூடைகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை தீயிட்டு அழிக்கப்பட்டது.

கடந்த ஒரு மாத கால பகுதியில் மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மீட்கப்பட்ட குறித்த உலர்ந்த மஞ்சள் கட்டி மூடைகள் இவ்வாறு அழிக்கப்பட்டன.

இதன்போது 28 மூடைகளில் பொதி செய்யப்பட்ட 777 கிலோ 600 கிராம் உலர்ந்த மஞ்சள் சுகாதார நடைமுறைக்கு அமைவாக தீயிட்டு அழிக்கப்பட்டன.

## சிங்கத்தின் உடல்நிலை மோசம்!

கொழும்பு, ஜூலை 07

தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் கோவிட் -19 நோயால் பாதிக்கப்பட்ட 'தோர்' என்ற சிங்கத்தின் நிமோனியா நிலை மோசமடைந்துள்ளதாக வனவிலங்கு இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸநாயக்க தெரிவித்தார்.

மிருகக்காட்சிசாலையில் சிங்கத்துக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிங்கத்துக்கு தோல் புண்களும் உருவாக்கியுள்ளன என்று அமைச்சர் கூறினார்.

சிங்கத்தின் உடல்நலம் மோசமடைந்துள்ளதாகவும், மிருகக்காட்சிசாலையின் அதிகாரிகள் அதைக் கவனித்து வருவதாகவும் அவர் கூறினார்.

# உறுதியாகிறது பசிலின் பாராளுமன்ற பிரவேசம்

### ஜயந்த கொட்டகொட பதவி விலகினார்!



**கொழும்பு, ஜூலை 07**

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் பஸில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினராக பதவி ஏற்பது குறித்த இழுபறி நிலையை முடிவுக்கு கொண்டு வரும்வகையில் வழிவிட்டு பதவி விலகினார் ஜயந்த கொட்டகொட.**

முன்னாள் அமைச்சரும் மஹிந்த சகோதரர்களில் ஒருவருமான பஸில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்க ஏதுவாக பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் ஜெயந்த கொட்டேகொட நேற்று தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார்.

தனது ராஜினாமா கடிதத்தை ஜெயந்த கொட்டேகொட நேற்று பாராளுமன்றத்தில் ஒப்படைத்தார் என பொதுஜன பெரமுன பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பஸில் ராஜபக்ஷ நேற்று பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்யத் தயாராக இருந்தார். எனினும் அவர் பாராளுமன்றம் வருவது தொடர்பில் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட குழப்பங்களைத் தொடர்ந்து அந்த நடவடிக்கை தாமதமானது.

பஸில் பாராளுமன்றம் வர ஏதுவாக பொதுஜன பெரமுன தேசியப் பட்டியில் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார பதவி விலகுவார் என முன்னர் தகவல்கள் வெளியாகின. இந்நிலையில் ஜெயந்த கொட்டேகொட தனது பாராளுமன்ற உறுப்புரிமையை நேற்று ராஜினாமா செய்துள்ளார்.

இதனையடுத்து பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்கவுள்ள பஸில் ராஜபக்ஷ உடனடியாகவே அமைச்சராகவும் பதவியேற்பார் எனத் தெரிய வருகிறது.

பஸில் ராஜபக்ஷ கடந்த மே மாதம் அமெரிக்காவுக்கு சென்று சமீபத்தில் நாடு திரும்பினார். இது அவரது தனிப்பட்ட பயணம் எனக் கூறப்பட்டது. எனினும் இதில் குடும்ப விவகாரம் உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின. தனது சகோதரர்களுடன் ஏற்பட்ட முரண்பாடுகளைத் தொடர்ந்தே பஸில் நாட்டை விட்டு வெளியேறினார் என்ற சந்தேகங்களும் வெளியிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## அழகியிடம் விசாரணை!

கொழும்பு, ஜூலை 07

தொலைக்காட்சி தொகுப்பாளர் சமுதித்த சமரவிக்ரமவின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக செய்யப்பட்ட முறைப்பாட்டை தொடர்ந்து, மொடல் பியுமி ஹன்சமலியை குற்றவியல் புலனாய்வுத் துறை (சிஐடி) விசாரித்துள்ளது.

கடந்த வாரம் சி.ஐ.டி முன் ஆஜரானதாக ஹன்சமலி கூறி னார்.

நேற்றுமுன்தினம் பேஸ்புக்கில் நேரடி ஒளிபரப்பில் பியுமி இதனை தெரிவித்தார்.

சமுதித்த சமரவிக்ரமவால் முறைப்பாடு அளிக்கப்பட்டதாக பின்னர் பொலிஸார் தனக்கு அழைப்பு அனுப்பியதாகவும், தான் யாருக்கும் தீங்கு செய்ய மாட்டேன் என்று கூறி குற்றச்சாட்டுகளை நிராகரித்ததாக ஹன்சமலி கூறினார்.

கொழும்பு ஷாங்க்ரி-லா ஹோட்டலில் நிகழ்வு அமைப்பாளர் சந்திமல் ஜெயசிங்கவின் பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்ட பலருடன் பியுமி ஹன்சமலி சமீபத்தில் தனிமைப் படுத்தப்பட்டார்.

அவர்களுக்கு நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்ட போதிலும், தன்னையும் மற்றவர்களையும் தனிமைப் படுத்துமாறு ஒரு தனியார் தொலைக்காட்சி மற்றும் சமரவிக்ரம ஆகியோர் பொலிஸாரைத் தூண்டியதாக அவர் குற்றம் சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மர்மமான முறையில் மாணவன் உயிரிழப்பு

### வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஜூலை 07

வவுனியா- தோணிக்கல் பிரதேசத்தில் பாடசாலை மாணவன் ஒருவர், மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

தோணிக்கல், லக்சபான வீதி பகுதியை சேர்ந்த உதய சந்திரன் சஞ்சீவ் (வயது 15) என்ற விபுலானந்த கல்லூரியில் தரம் 10 ல் கல்வி பயிலும் மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த மாணவன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு, தனது பெற்றோருடன் வீட்டில் இருந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று காலை, மகனை தூக்கத்திலிருந்து எழுப்புவதற்காக அவரது பெற்றோர் படுக்கையை பார்த்தபோது, மகனை காணவில்லை.

இதன் பின்னர் மகனை தேடியபோது, வீட்டின் வெளிப்பகுதியில் காயங்களுடன் சடலமாக கிடப்பதை அவர்கள் கண்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து சம்பவம் தொடர்பாக அறிந்து அவ்விடத்துக்கு வருகைதந்த தடயவியல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## சுனில் ரத்நாயக்க விடுதலை; வழக்கிலிருந்து நீதியரசர் விலகல்

கொழும்பு, ஜூலை 07

முன்னாள் இராணுவ அதிகாரி சுனில் ரத்நாயக்கவுக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதியின் பொதுமன்னிப்பை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட பல அடிப்படை உரிமைகள் மனுக்கள் மீதான விசாரணையில் இருந்து உயர்நீதிமன்ற நீதியரசர் முர்து பெர்னாண்டோ விலகியுள்ளார்.

இந்த மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது, நீதியரசர் முர்து பெர்னாண்டோ, தாம் இந்த விசாரணையில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தார்.

ஏற்கனவே தமக்கு எதிரான தீர்ப்பை ஆட்சேபித்து சுனில் ரத்னாயக்க தாக்கல் செய்த மனு விசாரணையின்போது ஐந்து நீதியரசர் குழுவில் தாம் அங்கம் வகித்தமையை சுட்டிக்காட்டி முர்து பெர்னாண்டோ விசாரணையில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தார்.

இதனையடுத்து சுனில் ரத்நாயக்கவுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவதற்கான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முடிவை சவால் செய்யும் அடிப்படை உரிமைகள் மனுக்களை எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி அழைப்பதற்கு உயர் நீதிமன்றம் தீர்மானித்தது.

2000 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் மிருசுவில் 8 பேர் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட சுனில் ரத்நாயக்க ஜனாதிபதி மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டார்.

இதனை எதிர்த்து மாற்று கொள்கை மையம் மற்றும் அதன் நிர்வாக இயக்குநர் பாக்கியசோதி சரவணமுத்து உள்ளிட்ட பல மனுதாரர்கள் சிறைச்சாலை ஆணையாளர், நீதி அமைச்சர், ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்கான தேசிய ஆணைய கத்தினரை பிரதிவாதிகளாக பெயரிட்டு இந்த மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

ரத்நாயக்கருக்கு மன்னிப்பு வழங்குவதற்கான முடிவு தன்னிச்சையானது, அது பொது நலனுக்காக செய்யப்படவில்லை என்று மனுதாரர்கள் வாதங்களை முன்வைத்திருந்தனர்.

2000 ஆம் ஆண்டு டிசெம்பர் 19 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள மிருசுவில் என்ற இடத்தில் எட்டு பொதுமக்களை கொலை செய்த வழக்கில் குற்றவாளி எனக் கண்டறியப்பட்ட நிலையில், இலங்கை ராணுவத்தின் சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்கவுக்கு 2015 ஜூன் 25 அன்று கொழும்பு உயர் நீதிமன்ற விசாரணைக் குழுவினால் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இதனையடுத்து, 2017, மே 20ஆம் திகதி அன்று, உயர் நீதிமன்றத்தின் ஐந்து நீதியரசர் குழு இந்த சம்பவம் தொடர்பாக முன்னாள் இராணுவ ஊழியர் சார்ஜன்ட் மீது விதிக்கப்பட்ட மரண தண்டனையை ஏகமனதாக உறுதிப்படுத்தியது.

## விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்யத் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 07

அரிசி விவசாயிகளிடமிருந்து நெல்லை நிர்ணயிக்கப்பட்ட விலையில் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அதற்கமைய ஒரு கிலோ நாட்டரிசி 50 ரூபாவுக்கும் ஒரு கிலோ சம்பா அரிசி 52 ரூபாவுக்கும் ஒரு கிலோ கீரி சம்பா அரிசி 52 ரூபாவுக்கும் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## பாடசாலை மாணவருக்கு புதிதாக பஸ் சேவைகள்

பாடசாலை மாணவர்களுக்காக புதிய பஸ் சேவை ஆரம்பிக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

தரம் ஐந்துக்கு கீழ் உள்ள வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமென அவர் குறிப்பிட்டார். மக்களுக்கு வசதியான போக்குவரத்து சேவையை வழங்க அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் அமைச்சர் திலும் அமுனுகம மேலும் கூறினார்.

# சமாதான பேச்சு முயற்சிகளை சு.கவும் ஐ.தே.கவும் குழப்பின!

## இப்போதுதான் உண்மையை அவிழ்க்கிறார் சொல்ஹெய்ம்



**கொழும்பு, ஜூலை 07**

**சந்திரிகா குமாரதுங்க சமாதான முயற்சிகளை முன்னெடுக்க விரும்பியவேளை, ரணில் அதனை பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவார் என அஞ்சியதாக இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதான பிரதிநிதி எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.**

ஊடகமொன்றுக்கு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

கொழும்பின் இரு முக்கிய கட்சிகளும் அவ்வேளை சமாதான முயற்சிகள் விடயத்தில் ஒத்துழைத்து செயல்படவில்லை. அவர்கள் பாராளுமன்றத்தில் - அரசாங்கத்தில் ஒரே பதவிக்காக போட்டியிட்டுக் கொண்டிருந்தனர். பொதுவான நலனுக்காக இலங்கையின் முக்கிய இரு கட்சிகளும் இணைந்து செயற்பட தயாராக இல்லாதமையே சமாதான நடவடிக்கைகளை மிகவும் கடினமானதாக மாற்றியது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதான உடன்படிக்கையொன்றை எட்டுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முயற்சிகளை மேற்கொண்டால் அவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதனை ஏற்றுக்கொள்ளாது அதனை பலவீனப்படுத்தும் என அச்சமடைந்தார்கள்.

அதே அச்சம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்தியிலும் காணப்பட்டது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதான முயற்சிகளை முன்னெடுக்க விரும்பியவேளை ரணில் அதனை பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவார் என அஞ்சினார்.

இது சமாதான முயற்சிகளை மேலும் கடினமானதாக்கியது. இரு கட்சிகளும் விடுதலைப் புலிகளுடன் சமாதான உடன்படிக்கையை எட்டுவதற்காக தங்கள் சக்தியை செலவிடுவதை விட தங்களுக்கு எதிரான மோதலுக்கு அதிக சக்தியை செலவிட்டன என நான் கருதினேன் -என்றார்.



## கிளிநொச்சி வைத்தியசாலைக்கு ஈ.சி.ஜி இயந்திரம் கையளிப்பு

கிளிநொச்சி, ஜூலை 07

அலைன்ஸ் பினான்ஸ் நிறுவனத்தின் கிளிநொச்சி கிளையினால் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஈ.சி.ஜி இயந்திரம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு நேற்று கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்று காலை 9 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றது.

குறித்த நிறுவனத்தின் பிராந்திய தலைமை அதிகாரி எஸ்.நிசாந்தன், தங்க கடன் மேற்பார்வை மேற்பார்வையாளர் ரி.குமரதாஸ், கிளிநொச்சி கிளை முகாமையாளர் எச்.குணாளன் ஆகியோர் கிளிநொச்சி வைத்தியசாலை வைத்திய அதிகாரி வைத்தியர் சுகந்தனிடம் நேற்று கையளித்தனர்.

இதன்போது ஈ.சி.ஜி மருத்துவப் பிரிவின் உத்தியோகத்தர் மற்றும் வைத்தியர்களும் பிரசன்னமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## மன்னாரில் தடுப்பூசி பெற ஆர்வம் காட்டும் மக்கள்!

மன்னார், ஜூலை 07

மன்னார் மாவட்டத்தில் வசிக்கும் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான கொரோனா தொற்று தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை 2 ஆவது நாளாக நேற்று செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

நேற்று அதிக எண்ணிக்கையான மக்கள் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள ஆர்வம் காட்டினர்.

மன்னார் ஆடைத் தொழிற்சாலை பிரதான வீதியில் அமைந்துள்ள பொது மண்டபத்தில் 2 ஆவது நாளாகவும் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது கிராம அலுவலர் பிரிவுகள் ஊடாக ஒதுக்கப்பட்ட நேரங்களுக்கு அமைய செல்லும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டது.

இதே வேளை, நேற்று செவ்வாய்க்கிழமை நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் முருங்கன் பொது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் இளம்பெண் மாயம்!

வவுனியா, ஜூலை 07

வவுனியாவில் இளம் குடும்பப் பெண் ஒருவரை காணவில்லை என அவரது தாயாரால் நேற்றுமுன்தினம் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொக்குவெளி, மகாறம்பைக்குளம், அரசடி வீதியில் வசிக்கும் கண்ணன் வினிதா (வயது-22) என்பவரே காணாமற்போயுள்ளார்.

அவர் கடந்த 4ஆம் திகதி மாலை 6 மணியளவில் தனது அம்மாவின் வீட்டிலிருந்து அருகாமையில் உள்ள கடைக்குச் சென்றுள்ள நிலையிலேயே காணாமல்போயுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் தொடர்பில் விவரங்கள் கிடைக்கப்பெற்றால் வவுனியா பொலிஸாருக்கோ அல்லது 0765462984 என்ற தொலைபேசி இலக்கத்துக்கோ தொடர்பு கொண்டு தெரியப்படுத்துமாறு அவரின் தாயார் தெரிவித்துள்ளார்.



## சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளை மேம்படுத்த அமெரிக்கா 75 மில்லியன் டொலர்கள் கடன் உதவி

கொழும்பு, ஜூலை 07

கொவிட் 19 தொற்றுநோய் நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு உதவும் வகையில் 75 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை கடனாக அமெரிக்கா வழங்குகிறது.

சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையினை விரிவுப்படுத்துவதில் மற்றும் வலுவூட்டுவதில், குறிப்பாக பெண் வர்த்தக உரிமையாளர்கள் உதவும் வகையிலான என்.டி.பி வங்கியின் பணிக்கு உதவுவதற்காக ஐக்கிய அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமானது 75 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியளிப்பினை அந்த வங்கிக்கு வழங்குகிறது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த நிதியளிப்பு ஒப்பந்தத்தில் கடன்தொகையின் ஒரு பகுதியானது பெண்களுக்குச் சொந்தமான தொழில்துறை, பெண்கள் தலைமைத்துவக் குடும்பங்கள் அல்லது பெண்களை வலுவூட்டும் உற்பத்தியொன்றையோ அல்லது சேவையையோ வழங்கும் வர்த்தகங்களுக்கு வழங்கப்படல் வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

"நிதிகளுக்கான அணுகலை மேம்படுத்துவது இலங்கையில் உள்ள பெண் வர்த்தக உரிமையாளர்கள் தங்களது முழுமையான பொருளாதாரத் திறனை உணரவும், இலங்கையின் பொருளாதாரம் வளரவும் உதவும்," என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ் கூறினார்.

"பெண்கள் தங்கள் சொந்த நிறுவனங்களால் அவற்றின் உயர் முகாமைத்துவ பதவிகளில் பணிக்கமர்த்தப்படுவதை உறுதி செய்வதற்கு ஐக்கிய அமெரிக்கா உறுதிப்பூண்டுள்ளது," என்றும் அவர் குறிப்பிட்டார்.

## உலகளாவிய கொரோனா தொற்று நிலையில் இலங்கை 74ஆவது இடத்துக்கு முன்னேற்றம்

கொழும்பு, ஜூலை 07

இலங்கையில் கொரோனா 3வது அலை பாதிப்பு தொடர்ந்து வரும் நிலையில் உலகளாவிய கொரோனா பாதிப்பு நலவரத்தின் அடிப்படையில் 74ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது இலங்கை.

புதுவருட கொத்தணி தொற்று பரம்பலுடன் இலங்கையில் 3ஆவது அலை பாதிப்பு விறு விறுவென உயர்வடைந்தது.


தற்போது வரை புதுவருட கொத்தணியில் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது எண்ணிக்கை 165,713 ஆக அதிகரித்துள்ளது.

இதன் மூலம் இதுவரை கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கை 266,499 ஆக உயர்ந்துள்ளது.

இதையடுத்து உலகளாவி கொரோனா தொற்று பதிவான நாடுகள் வரிசையில் இலங்கை 74 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

266,557 தொற்றாளர்களுடன் பஹ்ரைன் நாடு 73ஆவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)



# கல்வியும் நல்லிணக்கமும்

அனுஷ்கா கஹந்தகமகே

தசாப்தங்களாக நீடித்த யுத்தம், ஆயிரக்கணக்கான இளம் உயிர்களைக் காவுகொண்ட இரு இளைஞர் கலகங்களுக்கு (1971, 1988-89) மத்தியில் இச்சிறு தீவு ஒரு இரத்த ஆற்றையே கண்டுவிட்டது. யுத்தம் முடிந்தபோதும் வன்முறையானது கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள், உயிர்த்த ஞாயிறு தின குண்டு வெடிப்புச் சம்பவங்கள் எனத் தடையின்றித் தொடர்கின்றது. அவற்றுக்கு மேலதிகமாக அண்மையில் சூட்கேஸ் ஒன்றினுள் தலையின்றிக் கண்டெடுக்கப்பட்ட பெண்ணின் சடலம் போன்ற எண்ணற்ற கோரச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

யுத்தத்திற்குப் பின்பும் இனமத வேற்றுமைகள் இன்னும் சாம்பல் போர்வையில் மறைந்திருக்கும் தீப்பொறிகளாய்ப் புகைத்துக் கொண்டிருக்கின்றன. அவற்றுக்கான அரசியல் தீர்வோ கண்ணுக்கெட்டிய தூரத்தில் இல்லை. சமூகப் படிநிலைகள், சமூகங்களுக்கிடையிலான இடைவெளி, சமுதாயத்தைத் தனி நபர்களாக உடைத்தல் என்பவற்றைத் தூர நோக்கற்ற அரசியல் பொருளாதரக் கொள்கைகள் மேலும் விரிவுபடுத்தியுள்ளன. ஆதிக்கம் படைத்த அரசியல் கட்சிகளின் பிரச்சாரங்கள் வியாபாரத்துவத்தால் உந்தப்பட்டவையாகக் காணப்படுகின்றன. இவை சிங்கள-பௌத்த பெரும்பான்மையின் பிரதிநிதித்துவத்தை மூலதனமாகக் கொண்டவை. இவர்களின் மேலோட்டமான பேச்சுக்களும் கொள்கைகளும் பெரும்பாலான சமூக மற்றும் அரசியல் நிறுவனங்களுக்குள் ஊடுருவிவிட்டன. எமது கல்விமுறையும் இதில் சிக்கத்தவறவில்லை.

கூறப்போனால் இவ்வாறான மேலாதிக்க விவரணங்களை நிலை நிறுத்துவதே எமது கல்வி நிறுவனங்கள் தான். பொதுவாக எமது பாடத்திட்டங்கள் சிங்கள-பௌத்த கலாசாரத்தைப் பெருமைப்படுத்திக் காட்டுவதோடு மாணவர்கள் மத்தியில் தர்க்கரீதியான சிந்தனையையும், கற்றலையும் ஊக்குவிக்காது அவற்றை அடக்கிவைக்கின்றன. உதாரணமாக பள்ளிக்கூட வரலாற்றுப் பாடத்திட்டமானது பெரும்பான்மையினரின் கண்ணோட்டத்திற்கேற்பவே அமைக்கப்பட்டுள்ளது. இங்கு பல்தரப்பட்ட மக்களின் கண்ணோட்டங்கள் வழியே கூறப்படும் வரலாறுகளின்படி எமது இன்றைய நிலைப்பாடு என்ன என்பதை ஆசிரியர்களோ மாணவர்களோ சிந்தித்தறியும் சந்தர்ப்பம் இல்லை. சிறுபான்மையினரின் குரல்கள் அடக்கப்பட்டு சிங்கள-பௌத்த மேலாதிக்கத்துடன் கூடிய ஒரு உத்தியோகபூர்வ வரலாறே எமது பாடப்புத்தகங்களில் சித்தரிக்கப்படுகின்றது.

பல நூற்றண்டுகளுக்கு முன் இடம் பெற்ற வரலாற்றுச் சம்பவங்கள் மீது தற்கால இனவாத்தைத் திணிப்பதன் மூலம் எமது தேசத்தின் இன-மையமான தன்மை வலுப்படுத்தப்படுகின்றது. உதாரணமாகத் “தமிழ்” மன்னனான எல்லாளனை முறையடித்த “சிங்கள-பௌத்த” மன்னன் என துட்டகைமுனு கொண்டாடப்படுகின்றான். பாடப்புத்தகங்களில் சிறுபான்மை இனங்களின் பொருத்தமற்ற சித்தரிப்பும் பாடசாலைகளை இனம், மதம், மற்றும் மொழி ரீதியாக வேறுபடுத்துவதும் இனங்களுக்கிடையிலான இடைவெளி, தவறான அபிப்பிராயங்கள், சந்தேகம், அறியாமை ஆகியவற்றை மேலும் அதிகரிக்கின்றன. இவற்றின் விளைவுகள் பாரதூரமானவை.

ஆகவே யுத்தகாலத்தின் போதும் அதன் பின்பும் நல்லிணக்கத்துக்கும் சமாதானத்துக்குமான முயற்சிகள் உள்நாட்டு ஆதரவு பெரியளவிலின்றி பெரும்பாலும் வெளிச்சக்திகளால் மேற்கொள்ளப்படுவதில் எவ்வித ஆச்சரியமுமில்லை. சமாதானப் பேச்சுவார்த்தைகளை நாட்டின் இறையாண்மையைத் தகர்ப்பதற்காகச் சர்வதேசச் சமூகம் மேற்கொள்ளும் சதித்திட்டங்கள் என இழிவுபடுத்துகிறார்கள். இது சம்பந்தமான சிங்கள-பௌத்த சமூகத்தின் எதிர்ப்போ அற்ப சொற்பம். போருக்குப் பிற்பட்ட இக்காலத்தில் சிங்கள-பௌத்த தேசியவாதக் குழுக்கள் சிங்கள இளைஞர்களையும் அணிசேர்த்து முஸ்லிம் சமூகங்கள் மீது ஒருமுகப்பட்ட தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன. இனங்களை ஒன்றுக்கொன்று எதிராகத் தூண்டிவிடும் இத்தகைய அரசியல் முயற்சிகள் மிகவும் சிறிதளவு கருத்தியல் எதிர்ப்புக்களையே எதிர்கொள்கின்றன.

இங்கு வேடிக்கையான விடயம் யாதெனில் பிரச்சனைக்குரிய இச்சமூக நிலைப்பாடுகளுக்கும் கல்விக்கும் இடையேயுள்ள தொடர்பை நாம் காண மறுப்பதாகும். அவற்றைத் தொடர்புபடுத்தும் தர்க்கங்களும் வாதங்களும் சிறிய முற்போக்கு வட்டாரங்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. எமது சமூகங்களுக்கிடையே நம்பிக்கையையும் புரிந்துணர்வையும் கட்டியெழுப்புவதை விடுத்து எமது கல்வித்திட்டமானது இனம், வர்க்கம், பால் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட வன்முறையையே வளர்த்துள்ளது. அரசியல் தலைவர்களோ கல்வி தொடர்பான கலந்துரையாடல்களைப் பொருளாதார அடிப்படையில் முன்னெடுத்துச் செல்வதோடு, நிலவும் பொருளாதார நெருக்கடிக்கான பழியைக் கல்வி மீது சுமத்திவிடுகிறார்கள்.

வேலைவாய்ப்புக்களை முதன்மையாகக்கொண்டு எமது அரசாங்கமானது பொருளாதார நெருக்கடியைக் கல்வி நெருக்கடியாக வடிவமைத்திருக்கின்றது. “அறிவுசார் பொருளாதாரத்துக்குப்” பங்களிக்ககூடிய “ஆற்றல்” மிக்க தொழிலாளர்களை உருவாக்குவதில் எமது கல்வித்திட்டத்தின் இயலாமை இங்கு முன்னிலைப்படுத்தப்படுகிறது. பொருளாதார நெருக்கடிக்கான காரணமாகவும் தீர்வாகவும் கல்வியைச் சாட்டுவது சுலபம். எமது கல்வித்திட்டத்தின் வழிகாட்டியான கொள்கை விளக்க அறிக்கையானது கல்விப் பிரச்சனைக்கான ஒரே தீர்வு விஞ்ஞானம் (Science), தொழினுட்பம் (Technology), பொறியியல் (Engineering), மற்றும் கணிதம் (Mathematics) சார் “STEM” கல்வியென முன்மொழிகின்றது.

இவ்வறிக்கையின் “தொழில்நுட்ப வல்லுனர்களை உருவாக்குவதற்கான உயர்கல்வி முறை” என்ற பகுதியில் கலைப்பிரிவுக் கல்வி புறந்தள்ளப்பட்டு மேற்கூறிய STEM கல்வியின் மேம்பாடும், ஆங்கிலப் புலமையாற்றலுமே வலியுறுத்தப்படுகின்றன. இங்கு STEM கல்வியால் பொருளாதாரம், கல்வி இரண்டினதும் நெருக்கடிகளை ஒருங்கே தீர்த்து நாட்டைப் “பொருளாதார அபிவிருத்தியை” நோக்கி இட்டுச் செல்ல முடியும் எனக் கருதப்படுகின்றது. எதிர்கால வேலைவாய்ப்புக்களின் தன்மையை எதிர்வுகூற முடியாததோடு, தற்போது இலங்கையில் தொழிலாளர்களுக்கான கேள்வி ஆடைக் கைத்தொழில் மற்றும் பாதுகாப்புச் சேவைகளிலேயே அதிகம் காணப்படுகிறது (தொழிலாளர் கேள்வி மதிப்பாய்வு 2017). எனினும் கொள்கையமைப்பாளர்களோ தகவல் தொழில்நுட்பம்சார் திறன்களை வளர்ப்பதிலும் தற்காலிகப் பொருளாதாரத்துக்கு ஏற்புடைய பணியாட்களை உருவாக்குவதிலுமே கவனம் செலுத்துகின்றனர்.

இருப்பினும் சகவாழ்வை விருத்தி செய்ய இன்றியமையாததாகப் பரந்தளவில் இனங்காணப்பட்டிருப்பது கலைப் பிரிவுக் கல்வியாகும். 2016 இல் நல்லிணக்க செயன்முறைகளுக்கான ஆலோசனைச் செயற்குழு, வரலாற்றுப் பாடத்திட்டத்தில் விலக்கப்பட்ட, சிறுபான்மையின் வரலாற்றுச் சித்தரிப்புகளையும் உள்ளடக்குவதைப் பரிந்துரை செய்தது.

**“பொருளாதாரத்தை முற்றிலும் புறக்கணிக்கும் ஒரு கல்விச் சீர்திருத்தத்தை முன்வைப்பது எனது குறிக்கோள் அல்ல. மாறாக யுத்தத்திற்குப் பிற்பட்ட பலவீனமான எமது சூழ்நிலையில் வெறும் “பொருளாதார அபிவிருத்தியை” நோக்கியதாக எமது கல்வித் திட்டம் அமைந்திருப்பதன் தாக்கங்களின் பால் எம் கவனத்தைத் திருப்புவதே எனது நோக்கமாகும்.**

இது தற்போதைய மேலாதிக்க வரலாற்று விவரணங்களிலிருந்து வெளிவந்து தர்க்க ரீதியான சிந்தனையுடன் இராணுவ மயமாக்கப்பட்ட, சாதி/இனப் பாரபட்சத்துடனான, ஆணாதிக்க, எதிர்ப்பாலுணர்ச்சியை நெறிமுறையாகக் கொண்ட இச்சமூகத்தில் வளர்ந்து வந்ததன் விளைவுகளைப் புரிந்துகொள்வதன் அவசியத்தை உணர்த்துகின்றது.

இச்செயற்குழுவானது இனமத வேறுபாடுகளையும், சமூகங்களுக்கிடையிலான அவநம்பிக்கையையும் கையளுவதற்குச் சில பரிந்துரைகளை முன்வைத்தது. பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர் பரிமாற்ற நிகழ்ச்சிகள், மொழி மற்றும் கலை தொடர்பான நிகழ்ச்சிகள், சர்வதேசத் தொடர்புகள் போன்ற பொதுப் பாடநெறிகளைப் பல்கலைக்கழகங்களுக்கு அறிமுகப்படுத்தல் போன்றவை அவற்றுள் சில. இப் பரிந்துரைகளில் பெரும்பாலானவை செயற்படுத்தப்படாமலேயே இருந்துவிட்டன. பொருளாதாரத் தைக் கருத்தில் கொண்டு STEM கல்வியின் மீதான கவனமும், “வேலையின்மை” என்ற பழங்கதையும் சமூக சிக்கல்களிலிருந்து கல்வி முன்னிட்ட வாதங்களைத் திசைதிருப்புவதோடு கலைப் பிரிவுக் கல்வியையும் பலவீனப் படுத்துகின்றன.

பொருளாதாரத்தை முற்றிலும் புறக்கணிக்கும் ஒரு கல்விச் சீர்திருத்தத்தை முன்வைப்பது எனது குறிக்கோள் அல்ல. மாறாக யுத்தத்திற்குப் பிற்பட்ட பலவீனமான எமது சூழ்நிலையில் வெறும் “பொருளாதார அபிவிருத்தியை” நோக்கியதாக எமது கல்வித்திட்டம் அமைந்திருப்பதன் தாக்கங்களின் பால் எம் கவனத்தைத் திருப்புவதே எனது நோக்கமாகும். ஆம், நாட்டின் பொருளாதாரத் தேவைகளை நிவர்த்திப்பது கல்வியின் கடமையாகும். எனினும் அபிவிருத்தியென்பது பொருளாதாரத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருந்த காலம் கடந்துவிட்டது.

அதற்கும் மேலான தூரநோக்குடைய சமூக இலக்குகளை நோக்கிச் செல்வதே மெய்யான அபிவிருத்திக்கான சிறந்த வழி என்பது சமகால உண்மையாகும். கல்வியானது ஆக்கத்திறன்களின் அபிவிருத்தியூடாகவும் சமாதானமான சகவாழ்வூடாகவும் மேற்குறிப்பிடப்பட்ட பரந்த சமூக இலக்குகளை அடைவதற்கான கருவியாக அமைய வேண்டும். இதுவே வன்முறையற்ற ஒரு சமூகத்தில் பொருளாதார இலக்குகளையும் அடைய வழிசெய்யும். ■

**அனுஷ்கா கஹந்தகமகே புதுடில்லியின் தெற்காசியப் பல்கலைக் கழகத்தில் சமூகவியலில் கலாநிதிப் பட்டம் பயிலும் மாணவியாவார்.**

**- மொழிபெயர்ப்பு: கோபிகா சிவகுமார்**

# இலங்கையில் மற்றுமொரு ஆயுதப் போராட்டம் இருக்குமா?

## சொல்ஹெய்ம் சொன்ன பதில்!



"இலங்கையில் எதிர்காலத்தில் ஆயுதப் போராட்டங்கள் எதுவும் இடம்பெறுவதற்கான சாத்தியப்பாடு எதனையும் நான் காணவில்லை, ஏனெனில் இலங்கை மக்கள் போரினால் மிகவும் களைப்படைந்து இருப்பதாக நான் நினைக்கிறேன்" எனக் கூறியிருக்கின்றார் இலங்கையின் சமாதானப் பேச்சுக்களில் மத்தியஸ்தராகப் பணியாற்றிய எரிக் சொல்ஹெய்ம்.

கடந்த வாரம் வழங்கிய நேர்காணல் ஒன்றில் இதனை அவர் தெரிவித்தார். அவரது நேர்காணலின் முக்கியமான பகுதி வருமாறு:

**கேள்வி:** இலங்கையில் மற்றொரு ஆயுதப் போராட்டம் இருக்குமா?

பதில் இலங்கையில் எதிர்காலத்தில் ஆயுதப் போராட்டங்கள் எதுவும் இடம் பெறுவதற்கான சாத்தியப்பாடு எதனையும் நான் காணவில்லை, ஏனெனில் இலங்கை மக்கள்போரினால்மிகவும்களைப்படைந்து இருப்பதாக நான் நினைக்கிறேன். யுத்தத்துக்கு முக்கிய காரணமான தமிழ் தேசிய பிரச்சினைக்குதீர்வு காணப்படவில்லை. தமிழ் மக்களின் கண்ணோட்டத்தில் இலங்கை எவ்வாறு பார்க்கப்படுகின்றது என்பதைஇலங்கையின் சிங்களமக்கள் புரிந்துகொள்ள முயற்சிப்பது நல்லது. தமிழர்கள் தங்கள் சொந்த நாட்டில் இரண்டாம் தர பிரஜைகளைப் போல உணர்கிறார்கள், அவர்கள் புரிந்துகொள்ளும் மொழியில் பொலிஸ் அல்லது அதிகாரிகளை அணுக முடியாது. முன்னோக்கி செல்வதற்கு தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டியதேவை உள்ளது

**கேள்வி:** புலம்பெயர்ந்தா இலங்கையர் திரும்ப செயற்படும் மூலோபாயத்தை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்? அது எவ்வளவுவுக்கு முக்கியம்?

**பதில்:** புலம்பெயர்ந்தோருக்கு மிகப் பெரிய பங்கு உண்டு. புலம்பெயர்ந்த இலங்கையர் முக்கியமாக தமிழர்களாகும். ஆனால் சிங்களவர்களும் உள்ளனர். அவர்கள் மிகவும் படித்த குழுவினர். நோர்வேயில், இளம் தமிழர்கள் பல்கலைக்கழகங்களில் சராசரி இளம் நோர்வேயர்களை விட மிகச் சிறப்பாக செயற்படுகிறார்கள். கனடா, ஜேர்மனி மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளிலும் இதுதான் நிலைமை.

இலங்கையில் அதனை (ஆற்றலை) நல்லபாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், வேலைகள், தொழிற்சாலைகள் அல்லது சுற்றுலா தலங்களில் முதலீடு செய்ய முடிந்தால் அது இலங்கையை முன்னோக்கி கொண்டு செல்லும். புலம்பெயர் மக்கள் அனைத்து சமாதான முயற்சிகளுக்கும் ஆதரவை வழங்க வேண்டும், ஆனால் இலங்கையில் சமாதான முயற்சி இலங்கையாலேயே வழிநடத்தப்பட வேண்டும் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

விமர்சன, அறிவுசார் மற்றும் தார்மீக ஆதரவையும் வழங்குவதற்கு புலம்பெயர்ந்தோரை ஊக்குவிக்க வேண்டும். ■

---



# கட்டாயத் தடுப்பூசியை ஒருவர் ஏற்காமல் மறுக்க முடியுமா?

> **தடுப்பூசி ஏற்றுவதை ஒருவரது விருப்பத் தெரிவாக விட்டுவிடவே பல நாடுகளும் விரும்புகின்ற போதிலும் பரந்துபட்ட அளவில் அதனை விரைவுபடுத்துவதாயின் சில அழுத்தங்களை மக்கள் மீது திணிக்கவேண்டிய கட்டாயமும் எழுகிறது.**

பாரிஸிலிருந்து **குமாரதாஸன்**

பல நாடுகளிலும் டெல்ரா போன்ற வைரஸ் திரிபுகளின் தொற்று அதிகரித்துவருவதால் தடுப்பூசி ஏற்றுவதை விரைவுபடுத்தவும் அதனைக் கட்டாயமாக்கவும் வேகமாக நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய அவசரம் அரசுகளுக்கு ஏற்பட்டுள்ளது.

தடுப்பூசி ஏற்றுவதை ஒருவரது விருப்பத் தெரிவாக விட்டுவிடவே பல நாடுகளும் விரும்புகின்ற போதிலும் பரந்துபட்ட அளவில் அதனை விரைவு படுத்துவதாயின் சில அழுத்தங்களை மக்கள் மீது

திணிக்கவேண்டிய கட்டாயமும் எழுகிறது. அவ்வாறு செய்ய முற்படும்

சந்தர்ப்பத்தில் அதற்கு எதிர்ப்புக் கிளம்பக்கூடிய நிலையும் உள்ளது.

பிரான்ஸில் இவ்வாறு தடுப்பூசி கட்டாயமாக்கப்படுதை அறிவிக்கின்ற அதிகாரம் யாரிடம் உள்ளது. அவ்வாறு அறிவிப்பதை பிரஜை ஒருவர் சட்டத்தின் துணையோடு எதிர்க்க முடியுமா? தடுப்பூசியை மக்களது விருப்பத்துக்கு மாறாகத் திணிக்க விரும்பவில்லை என்றே பிரான்ஸின் அரசு தொடர்ந்து கூறி வருகிறது.

தடுப்பூசி மக்களது சொந்த விருப்பத் தெரிவாகவே இன்னமும் விடப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சர் ஒலிவியே வேரன் சில தினங்களுக்கு முன்னரும் அரசின் இந்த நிலைப்பாட்டை உறுதிப்படுத்தி இருந் தார். ஆனாலும் நோயாளர் பராமரிப்பு போன்ற மருத்துவப் பணியினருக்கு தடுப்பூசியைக் கட்டாயமாக்குகின்ற முயற்சியை அரசு ஆரம்பித்துள்ளது.

பிரான்ஸின் பொதுச் சுகாதாரச் சட்டத்தின் L3111-1 சரத்தின் படி தடுப்பூசி ஒன்றைக் கட்டாய பயன்பாட்டுக்கு உத்தரவிடும் அதிகாரம் சுகாதார அமைச்சுக்கே உள்ளது. நாட்டின் அதிஉயர் சுகாதார அதிகார சபையின் (Haute Autorité de Santé) பரிந்துரையின்படி தடுப்பூசி தொடர்பான கொள்கைகளை சுகாதார அமைச்சர் வகுக்க முடியும்.

கொரோனா வைரஸ் தடுப்பூசிக்கு முன்னரே பல தடுப்பூசிகள் கட்டாயம் ஏற்றப்பட வேண்டியவை என்ற பட்டியலில் உள்ளன.

பிரான்ஸில் இரண்டு வயதுக்கு குறைந்த குழந்தைகளுக்கு பதினொரு வகையான தடுப்பூசிகள் கட்டாயமானவை. அத்துடன் ஆபத்தான நோயாளிகளைக் கவனிக்கின்ற மருத்துவப் பணியாளர்களுக்கும் தடுப்பூசிகள் உள்ளன. சில சுகாதாரச் சட்டங்கள் இதனை வரையறை செய்கின்றன. கட்டாயமாக ஏற்றிக் கொள்ள வேண்டிய தடுப்பூசிகளைத் தவிர்க்கின்ற மருத்துவப் பணியாளர்கள் தண்டனைகளைச் சந்திப்பதற்கும் இடம் உண்டு.

ஏற்பு ஊசி, தட்டம்மை, போலியோ, ரூபெல்லா உட்பட மொத்தம் பதினொரு தடுப்பூசிகள் (diphtheria, tetanus and polio, whooping cough, measles, mumps, rubella, hepatitis B, meningococcus C, pneumococcus and Haemophilus influenza) ஏற்கனவே கட்டாயமானவையாக நடைமுறையில் உள்ளன.

2018 ஆம் ஆண்டின் சட்டத்தின் கீழ் இந்தப் 11 தடுப்பூசிகளையும் ஏற்றிக் கொள்ளாத இரண்டு வயதுக்குக் குறைந்த பிள்ளை களை அரச மற்றும் தனியார் பாலர் பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளமுடியாது.

சில தொழில் துறையினரும் கட்டாயமாக சில தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்ள வேண்டிய கடப்பாடுடையோர் என்ற வகைக்குள் வரமுடியும். அத்தகைய தொழில் துறைகள் ஆண்டு தோறும் தொற்று நோய்களைப் பொறுத்துப் புதுப்பிக்கப்படுகின்றன.

அதேபோன்று தொற்றுக்கு உள்ளாகக் கூடிய சூழலில் தனியார் அல்லது அரச துறைகளின் பணியாற்றும் ஒருவர் அல்லது முதியவர்களை மூதாளர் இல்லங்களிலோ அல்லது அவர்களது வீடுகளிலேயோ வைத்துப் பராமரிப்பதை முறைப்படியான தொழிலாகக் கொண்டவர்கள் சில தொற்று நோய்களுக்கு எதிராகத் தங்களை நோய் எதிர்ப்புள்ளவர்களாக்கிக் கொள்வது கட்டாயம் ஆகும்.

அத்தகையோர் hepatitis B, diphtheria, tetanus, polio, influenza போன்ற நோய்களுக்கான தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்வது கட்டாயம் என்பதை பிரான்ஸின் பொதுச் சுகாதாரச் சட்டத்தின் டு3111-4 பிரிவு தெளிவுபடுத்துகிறது.

இந்த அடிப்படையில் நோயாளர்களையும் மூதாளர்களையும் பராமரிக்கின்ற பணிகளில் ஈடுபடுகின்ற மருத்துவப் பணியாளர்கள் கொரோனா வைரஸ் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வேண்டும் என்பதும் தார்மீகரீதியான கட்டாயம் ஆகும். ஆனால் அத்தகைய பணியாளர்களில் அரைவாசிப் பங்கினரே இதுவரை தமது முதலாவது தடுப்பூசியை ஏற்றிக்கொண்டுள்ளனர்.

மருத்துவப் பராமரிப்பாளர்களில் (le personnel soignant) குறைந்தது 80 வீதமானவர்கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்கு முன்பாகத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாதவிடத்து அவர்களுக்கு அதனைக் கட்டாயமாக்குகின்ற சட்ட நடவடிக்கையை அரசு எடுக்கவுள்ளது. ■


# புலமைச் சிகரம்

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள் I

நேரம் - 45 நிமிடம்


09. பின்வரும் கணிதச் செய்கையினை அவதானித்து வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.





1) 25 2) 5 3) 6


10. பின்வரும் பாடலினால் குறிப்பிடப்படுவது எது?
சுயமான ஒளி இல்லை
புவியதை வலம் வருவான்
மாதத்தில் ஒருமுறை மாயமாவான்
தண்மையான ஒளிதனை தரணிக்களிப்பான்.


1) நட்சத்திரம் 2) திங்கள் 3) பூமி

11. 





என்னும் தரவுகளைக் கொண்டு பிரசினத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.





1)  2)  3) 

12. 


இங்கு ஊடுருவு தாளில் இரண்டு படங்கள் வரையப் பட்டுள்ளன. ஒன்றன் மீது ஒன்று வைக்கப்பட்ட பின்னர் தெரியும் உருவைத் தெரிவு செய்க.

1)  2)  3) 

13. 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி திங்கட்கிழமை எனின் அம் மாதத்தின் திங்கட்கிழமைகள் எத்தனை?
1) 5 2) 4 3) 3


14. 


இவ்வுருவில் உள்ள முக்கோணிகள் எத்தனை?
1) 31 2) 13 3) 42


15. 

சதுரமுகி தாயக்கட்டை அருகில் தரப்பட்டுள்ளது. இதன் எதிர்ப்பக்கங்களின் கூட்டுத்தொகை 7 எனின் சரியாகக் காட்டப்பட்ட உரு எது?

1) 



2) 


3) 


16. 


= ........................................

எண் சட்டகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண்களைக் கூட்டினால் கிடைக்கக்கூடிய எண் யாது?
1) 1910 2) 110 3) 200

17. 

இங்கு காட்டப்பட்டுள்ள சதுரமுகி கட்டை ஒன்றினைச் சுற்றிவர தீந்தை பூசப்பட்ட பின்பு கோட்டின் வழியே வெட்டி எடுக்கப்பட்டது. தனித்தனியே எடுக்கப்பட்ட பின்னர் எந்த பக்கமும் நிறம் பூசப்படாத துண்டுகள் எத்தனை காணப்படும்?


1) ஒன்றுமில்லை 2) இரண்டு 3) ஒன்று

18. தவறான கணிதக்கோவையைத் தெரிவு செய்க.

1) $5 \times 5 - 5 = 20$ 2) $8 \times 8 + 6 = 70$ 3) $0 \times 3 \times 3 = 9$

19. ஓர் எண்ணை இரண்டால் பெருக்கி ஐந்தால் வகுத்து இரண்டைக் கூட்டினால் நான்கு கிடைக்கும் எனின் முதலில் குறிப்பிட்ட எண் எது?
1) 2 2) 5 3) 3

20. கீழே தரப்பட்ட கடிகார முகங்கள் காட்டும் நேரங்களை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது தோன்றும் நேரத்தை அடிப்படையாகக் கொண்டு ஒழுங்குபடுத்தும் போது பெறப்படுவது





1) DCAB 2) DABC 3) BADC

21. ஒவ்வொரு பிள்ளைகளும் பிறந்த ஆண்டு, மாதம், திகதிகள் கீழே தரப்பட்டுள்ளன. அவர்களின் வயதுகளின் அடிப்படையில் கூடிய வயதிலிருந்து குறைந்த வயது வரை ஒழுங்குபடுத்தும் போது காட்டும் சரியான விடை.


| | |
|---|---|
| நிகிதா | 02.04.2010 |
| சுவேதா | 06.03.2009 |
| நிவேதா | 04.04.2010 |
| அயித்தா | 23.08.2009 |

1) நிவேதா, நிகிதா, அயித்தா, சுவேதா
2) சுவேதா, அயித்தா, நிகிதா, நிவேதா
3) அயித்தா, சுவேதா, நிகிதா, நிவேதா

22. 


அருகில் காட்டப்பட்ட உருவில் மரக்கட்டைகள் தரப்பட்டுள்ளன. இவை ஒவ்வொரு துண்டும் அதற்குக் கீழே உள்ள துண்டின் நிறையின் கால்வாசியாகும். 4 ஆவது துண்டின் நிறை 4800g எனின், துண்டு A இன் நிறை யாது?

1) 1200g 2) 600g 3) 75g

23. 


இச் சுழலியை அம்புக்குறி வழியே சுழற்றும்போது இலக்கம் 3 தொடுகையுறும் எழுத்து யாது?

# கொரோனா சட்டத்தை மீறிய 47,922 பேர் இதுவரை கைது!

கொழும்பு, ஜூலை 07

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 343 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 47 ஆயிரத்து 922 ஆக உயர்வடைந்துள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள் ளார். (இ)

# தந்தையைக் கடுமையாகத் தாக்கிய புத்தளம் நகர சபை உறுப்பினர் கைது

புத்தளம், ஜூன் 07

தாம் கடுமையாகத் தாக்கப்படுவதாகத் தந்தையொருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில், புத்தளம் நகர சபையின் உறுப்பினர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினரே இவ்வாறு கைதாகியுள்ளார்.

70 வயதான அவரது தந்தை, தமது மகனால் தாம் தாக்கப்படுவதாகப் பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கமைய நேற்றுமுன்தினம் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (இ)

# பூஸா சிறையில் மேலும் 30 கைதிகளுக்கு தொற்று



கொழும்பு, ஜூலை 07

பூஸா சிறைச்சாலையில் மேலும் 30 கைதிகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனக் காலி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

கடந்த முதலாம் ஆம் திகதி 40 கைதிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே 30 பேருக்குத் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

குறித்த கைதிகள் தென், மேற்கு மாகாணங்களிலுள்ள நீதிமன்றங்களால் தண்டனைவிதிக்கப்பட்டவர்கள் என்று சிறைச்சாலைகள் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொற்றுக்குள்ளான கைதிகள், தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

குறித்த தொற்றாளர்களுடன் பூஸா சிறைச்சாலையில் தொற்றுக்குள்ளான கைதிகளின் எண்ணிக்கை 350 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

# மேலும் 4 கிராம சேவகர் பிரிவுகள் நேற்றிலிருந்து முற்றாக முடக்கம்!

## நாரந்தனை வடமேற்கு தம்பாட்டியும் தனிமைப்படுத்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 07

**நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலால் மேலும் சில பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் ஒரு பிரதேசம் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.**

அதற்கமைய, யாழ்ப்பாணம், மாத்தறை மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 4 கிராம சேவகர் பிரிவுகள் நேற்றுக் காலை முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கொரோனா பரவல் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாரந்தனை வடமேற்கு கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட தம்பாட்டி பகுதி தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

மாத்தறை மாவட்டத்தின் மாத்தறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உயன்வத்தை மற்றும் உயன்வத்தை வடக்கு கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

களுத்துறை மாவட்டத்தின் தொடாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புஹாபுகொட கிழக்கு கிராம சேவகர் பிரிவின் மலபடவத்த பகுதி தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏறாவூர் 02 கிராம சேவகர் பிரிவு நேற்றுக் காலை 6 மணி முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது எனவும் இராணுவத் தளபதி மேலும் கூறியுள்ளார். (இ)



# மோ.சைக்கிள் திருடர்கள் ஹெரோயினுடன் கைது!

கொழும்பு, ஜூலை 07

மோட்டார்சைக்கிள் திருட்டு தொடர்பில் 3 சந்தேகநபர்கள் அத்துருகிரிய பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

இதன்போது மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது அவர்களிடமிருந்து 4 கிராம் ஹெரோயின் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட நபர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (இ)

*கல்கிஸை சிறுமி விற்பனை விவகாரம்:*

# இருதய சத்திர சிகிச்சை நிபுணர் உட்பட மேலும் இருவர் சிக்கினர்!

**இதுவரை 34 பேர் கைது என்கிறார் பொலிஸ் பேச்சாளர்**



கொழும்பு, ஜூலை 07

கல்கிஸையில் 15 வயதான சிறுமி ஒருவர் இணையத்தளம் ஊடாக பாலியல்தொழிலுக்காக விற்பனை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதானவர்களில் இலங்கையின் முக்கிய இருதய சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவரும் அடங்குகின்றார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதன்படி இந்தச் சம்பவம் தொடர்பாக கைதானவர்களின் மொத்த எண்ணிக்கை 34 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் மாலைதீவின் முன்னாள் நிதி இராஜாங்க அமைச்சர் ஒருவரும் உள்ளடங்குகின்றார் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார். (இ)

# அரசில் இருந்து தயாசிறி வெளியேறுவதே சிறந்தது

## இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம பதிலடி

கொழும்பு, ஜூலை 07

“அரசின் தீர்மானங்களை ஏற்க முடியாவிட்டால், இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர அரசில் இருந்து வெளியேறுவதே சிறந்தது” என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, அரசின் பிரதான பங்காளிக் கட்சி அல்ல எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பஸில் ராஜபக்ச பாராளுமன்றம் வருவதால் மாற்றம் ஏதும் ஏற்படப்போவதில்லை என்று தெரிவித்திருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர, தற்போதைய அமைச்சரவையையும் கடுமையாக விமர்சித்திருந்தார்.

இதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர்கள் கடும்சீற்றத்துடன்பதிலடி கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், இது தொடர்பில் கருத்து வெளியிட்ட இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம,

“ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆளுந்தரப்பின் பிரதான பங்காளிக் கட்சி அல்ல. அரசின் தீர்மானங்களை ஏற்க முடியாவிட்டால் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர அரசில் இருந்து வெளியேறலாம். அரசால் எடுக்கப்படும் தீர்மானங்களை உள்ளே இருந்து விமர்சிப்பதற்கு உரிமை கிடையாது. எனக்கு எதாவது அமைச்சுப் பதவி கிடைத்தால் அதனைச் சிறப்பாக செய்யவே முற்படுவேன். வழங்கப்பட்ட அமைச்சை தயாசிறி விமர்சிப்பதென்பது கீழ்த்தரமான செயற்பாடாகும்” - என்றார்.



அதேவேளை, “ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள வேறு நபருக்கு தமது இராஜாங்க அமைச்சுப் பதவியை வழங்குவதற்கு தயாசிறி ஜயசேகர முன்வர வேண்டும்” என்று இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா குறிப்பிட்டார். (இ)

# 2 கிலோ கஞ்சாவுடன் இருவர் மாட்டினார்கள்

கொழும்பு, ஜூலை 07

வெல்லவ பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது கஞ்சாவுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் குறித்த சந்தேகநபர்கள் கைதுசெய்யப்படும்போது அவர்களிடம் 2 கிலோ 250 கிராம் கஞ்சா இருந்தது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக வெல்லவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (இ)



# தப்பி ஓடும் ஆப்கான் படையினர்: தலிபான்கள் வசமாகும் நகரங்கள்!

காபூல், ஜூலை 07

ஆப்கானிஸ்தானில் தீவிர மாகி வரும் தலிபான்களின் தாக்குதலுக்கு அஞ்சி ஆப்கானிஸ்தான் படையினர் அயல் நாடுகளுக்குத் தப்பியோடி வருகின்றனர். இவ்வாறு ஆயிரம் வரையான ஆப்கான் படையினர் தங்கள் நாட்டுக்கு வந்து தஞ்சமடைந்தனர் என்று தஜிகிஸ்தானின் எல்லைப் பாது காப்புப் படை கூறியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் கடந்த 20 ஆண்டுகளாக நிலைகொண் டிருந்த அமெரிக்கா உள்ளிட்ட நேட்டோ படையினர் பெரும் பாலும் வெளியேறிவிட்ட நிலையில் அங்கு தலிபான்களின் ஆதிக்கம் வலுவடைந்து வருகிறது.

கடந்த சில வாரங்களாக ஆப்கானிஸ்தானின் பல்வேறு இடங்களிலும் தலிபான்கள் தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள் ளனர். அத்துடன், பல்வேறு பகுதிகளை மீண்டும் தலிபான் கள் கைப்பற்றியுள்ளனர்.

நேட்டோ படையணி ஆப்கானில் இருந்து வெளியேற முன்னர் தலிபான்களுடன் ஒப் பந்தம் செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் அல் - கொய்டா உள்ளிட்ட பயங்கர வாத இயக்கங்களை தங்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இயங்குவதற்கு அனு மதிப்பதில்லை என தலிபான் கள் ஒப்புக்கொண்டனர். எனி னும், ஆப்கானிஸ்தான் படை களுடன் போர் நிறுத்தம் செய்ய



அவர்கள் ஒப்புக்கொள்ள வில்லை.

ஆப்கானிஸ்தானின் மூன் றில் ஒரு பகுதி தற்போது தலி பான்களின் கட்டுப்பாட்டில் இருப்பதாக மதிப்பிடப்படு கிறது. தொடர்ந்தும் நாட்டின் சில பகுதிகளை அவர்கள் கைப் பற்றியுள்ளனர். குறிப்பாக, தஜி கிஸ்தான் எல்லைக்கு வெகு அருகே உள்ள பாதக்ஷான், தக் கார் மாகாணங்களில் தலிபான்கள் விரைவாக முன் னேறி வருகின்றனர்.

இந்நிலையில் தலிபான்க ளின் தாக்குதல்களை சமாளிக்க முடியாமல் ஆப்கானிஸ்தான் படையினர் தஜிகிஸ்தானுக்குள் தப்பியோடி தஞ்சமடையும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அத்துடன், பாகிஸ்தான், உஸ் பெகிஸ்தான் நாடுகளுக்கும் இவ்வாறு பல இராணுவத்தினர் தப்பியோடிவிட்டனரெனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆப்கானிஸ்தானில் ஆட்சி யில் இருந்த தலிபான்களை 2001 ஒக்ரோபர் மாதம் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படை அகற்றியது. செப்ரெம்பர் 11 தாக்குதலுடன் தொடர்புடைய ஒஸாமா பின்லேடன், அல்கொய்டா அமைப்பினருக்கு தலிபான்கள் தஞ்சம் கொடுத்தனர் என்ற குற் றச்சாட்டிலேயே தலிபான் களின் ஆட்சியை அமெரிக்கா அகற்றியது. புதிய அரசாங்கம் ஒன்றை நிறுவிய அமெரிக்கா தற்போது ஆப்கானிஸ்தானிலி ருந்து தனது படைகளை முழு மையாக வெளியேற்றும் முடிவை எடுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# உணவைத் தவிர்த்துப் போராடி வளர்த்தவரிடம் சேர்ந்த சிங்கம்

## கம்போடியாவில் நெகிழ்ச்சி சம்பவம்!

புனோம்பென், ஜூலை 07

வீட்டில் செல்லப்பிராணி யாக வளர்க்கப்பட்ட சிங்கம் உணவை உண்ண மறுத்து அடம்பிடித்தமையால் விசேட விதி விலக்கின் கீழ் மீண்டும் அது வளர்த்தவரிடமே ஒப்ப டைக்கப்பட்டது.

இந்த நெகிழ்ச்சி சம்பவம் கம்போடியாவில் இடம்பெற் றுள்ளது. அந்த நாட்டில் காட்டு விலங்குகளை வீட்டில் செல்லப்பிராணிகளாக வளர்ப் பது தடை செய்யப்பட்டுள் ளது.

இந்நிலையில், தலைநகர் புனோம்பென்னை சேர்ந்த ஒரு வர் தனது வீட்டில் சிங்கம் ஒன்றை வளர்த்து வந்திருந்தார். இந்தத் தகவல் சமூகவலைத் தளம் மூலம் பரவியதைத் தொடர்ந்து வனவிலங்கு அதிகாரிகள் அந்த சிங்கத்தை அவரிடமிருந்து கடந்த ஜூன் 27ஆம் திகதி உரிமையாளரிட மிருந்து பிரித்தனர்.

அதிகாரிகளின் பராமரிப் பில் புனோம் தமாவோ வன விலங்கு சரணாலயத்தில் இருந்த அந்த சிங்கம் உணவு உண்ணாமல் அடம்பிடித்தது. இது தொடர்பான செய்தி பரவவே, அந்த சிங்கத்தை வளர்த்தவரிடமே ஒப்படைத்து அதன் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்று உலகம் முழுவதும் இருந்து விலங்குகள் நல ஆதரவாளர்கள் கோரிக்கை விடுத்தனர். இந்தக் கோரிக்கை சமூகவலைத்தளத்திலும் அதிமுக்கியத்துவம் பெற்றது.

இதையடுத்து விசேட விதி விலக்கின் கீழ் அந்த சிங்கத்தை வளர்த்தவரிடமே ஒப்படைக்கு மாறு கம்போடிய பிரதமர் ஹன்சென் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். அத்துடன் அவருக்கு விதிக்கப்பட்ட 30 ஆயிரம் அமெரிக்க டொலர் அபராதத் தொகையையும் மீள செலுத்த உத்தரவிட்டார்.

இதையடுத்து கடந்த திங் கட்கிழமை அந்த சிங்கம் உரிமையாளரிடம் ஒப்படைக் கப்பட்டது. இதன் பின்னரே அந்த சிங்கம் உணவு உண்ண ஆரம்பித்துள்ளது.

இந்தச் சம்பவம் விலங்கு நல ஆர்வலர்கள், மக்களி டையே பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

# சுதந்திர தின கொண்டாட்டத்தில் துப்பாக்கிச் சூடு; இருவர் மரணம்!

சிக்காகோ, ஜூலை 07

அமெரிக்காவின் சுதந்திர தின கொண்டாட்டம் ஒன்றில் மர்ம நபர் நடத்திய துப்பாக் கிச் சூட்டில் இரு இளைஞர்கள் கொல்லப்பட்டனர். மூன்று பேர் காயமடைந்தனர்.

அமெரிக்காவில் கடந்த திங்கட்கிழமை சுதந்திரதினம் கொண்டாடப்பட்டது. இதை யொட்டி நாடு முழுவதும் பல் வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதில், ஒஹியோ மாகா ணத்தின் சின்சினாட்டி நகரில் பூங்கா ஒன்றில் சுமார் 400 வரை யான இளைஞர்கள்கூடி சுதந்திர தினத்தை கொண்டாடினர். இதற்குள் புகுந்த மர்மநபர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 16 மற்றும் 19 வயதான இருவர் கொல்லப் பட்டனர். இது திட்டமிடப் பட்ட தாக்குதலா என்று தெரிய வில்லை என்று தெரிவித்த பொலிஸார், விசாரணைகள் தொடர்வதாகக் கூறினர்.

அமெரிக்காவில் இந்த ஆண்டின் முதல் 5 மாதங்களில் மட்டும் துப்பாக்கிசூட்டு சம்ப வங்களில் 8 ஆயிரத்து 100 பேர் கொல்லப்பட்டனர் என்று வாஷிங்டன் போஸ்ட் பத்திரி கையில் ஆய்வில் தெரிய வந்துள்ளது. (ஐ)

# கொரோனா தொற்றால் 40 இலட்சம் பேர் மரணம்!

நியூயோர்க், ஜூலை 07

கொரோனா தொற்றால் உலகளவில் உயிரிழந்தவர்க ளின் எண்ணிக்கை 40 இலட் சத்தை கடந்தது. இதே வேளை, பாதிக்கப்பட்டவர் களின் எண்ணிக்கை 18 கோடியே 49 இலட்சத்தைத் தாண்டியுள்ளது.

உலகம் முழுவதும் கொரோனா தடுப்பூசி போடும் பணி தீவிரமடைந் தாலும் தொற்றும் அதிவேக மாக பரவி வருகின்றது என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் நேற்றுக் காலை வரையான நிலை வரத்தின் அடிப்படையில் கொரோனா தொற்றால் 40 இலட்சத்து 585 பேர் உயிரிழந்தனர். இதில், அமெரிக்காவில் 6 இலட்சத்து 21 ஆயிரத்து 335 பேரும், இந்தியாவில் 4 இலட்சத்து 3 ஆயிரத்து 310 பேரும் உயிரிழந்தனர். இந் தப் பட்டியலில் பிரேஸில், பிரான்ஸ், துருக்கி, இத்தாலி, ரஷ்யா இங்கிலாந்து நாடு களிலும் பலி எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

இதேபோன்று, உலக ளாவிய ரீதியில் தொற்றாளர் களின் எண்ணிக்கை 18 கோடியே 49 இலட்சத்து 31 ஆயிரத்து 148ஆக நேற்று காணப்பட்டது. 16 கோடியே 92 இலட்சத்து 98 ஆயிரத்து 421 பேர் தொற்றி லிருந்து குணமடைந்துள்ள னர். (ஐ)



# பிரிட்டன் இளவரசிக்கு கொரோனா தொற்று!

லண்டன், ஜூலை 07

பிரிட்டன் இளவரசி கேட் மிடில்டன் கொரோனா தொற் றுக்கு இலக்காகியுள்ளார். அவரின் உடல்நிலையை மருத் துவர்கள் தீவிரமாகக் கண் காணித்து வருகின்றனர் என்று கென்சிங்டன் அரண்மனை நேற்று தகவல் வெளியிட்டது.

இளவரசி கேட் மிடில்டன் அண்மையில் விம்பிள்டன் போட்டிகளை காண சென்றி ருந்தார். அத்துடன் அருங் காட்சியகத்துக்கும் வேறு சில இடங்களுக்கும் சென்றிருந் தார். இதன்போது அவருடன் பழகிய ஒருவருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட் டது.

இதையடுத்து இளவரசி தன்னை தனிமைப்படுத்திக் கொண்டார். இந்நிலையி லேயே அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. கடந்த 10 நாட்கள் அவர் மருத்துவர்களின் கண்காணிப் பிலேயே இருக்கிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மருத்துவமனைக்குள் புகுந்து குழந்தைகள், தாதியர்களை கடத்தினர் பயங்கரவாதிகள்!

## நைஜீரியாவில் சம்பவம்

நைகர், ஜூலை 07

நைஜீரியாவில் மருத்துவ மனைக்குள் புகுந்த பயங்கர வாதிகள் 3 வயதுக்கும் குறை வான 3 குழந்தைகளையும் 5 தாதியர்களையும் கடத்திச் சென்றுள்ளனர்.

நைஜீரியாவில் போகோ ஹரம், ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கர வாத அமைப்பினர் செயல் பட்டு வருகின்றனர். இவர்கள் பாடசாலைகளுக்குள் புகுந்து மாணவர்களை கடத்தி அர சாங்கத்தை மிரட்டி தமது தேவைகளை இந்த அமைப்பு வாடிக்கையாகக் கொண்டுள்ளது.

இந்தநிலையில், அந்த நாட்டின் வடக்கு மாகாணத் தில் கதுனாவில் ஷானியா என்ற நகரிலுள்ள மருத்துவமனைக் குள் புகுந்த தீவிரவாதிகள் 3 குழந்தைகளையும், 5 தாதியர் களையும் ஆயுத முனையில் கடத்திச் சென்றனர்.

இந்தக் கடத்தல் சம்பவத் துக்கு எந்த ஒரு பயங்கரவாத அமைப்பும் இதுவரை பொறுப் பேற்கவில்லை. (ஐ)

# அண்டர்சன் 1000 விக்கெட்!

லண்டன், ஜூலை 07

இங்கிலாந்து அணியின் வேகப்பந்துவீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன் முதல்தரக் கிரிக்கெட்டில் ஆயிர மாவது விக்கெட்டை நேற்று வீழ்த்தினார்.

தற்போது கவுண்டி கிரிக்கெட் போட்டியில் லங்காஷெயர் அணிக்காக விளையாடிவரும் அண்டர்சன், கென்ட் அணிக்கு எதிரான ஆட்டத்தின் போது இந்த மைல் கல்லை எட்டினார்.

இந்தப் போட்டியில் அண்டர்சன் தனது அபார பந்துவீச்சால் ஜோக் கிராளி, ஜோர்தன் கொக்ஸ், ஒலிவர் ரொபின்ஸன், ஜேக் லீனிங், ஹீனியோ குன், மாட் மில் னெஸ், ஹரி பட்மோர் என்று 7 விக்கெட்களை வீழ்த்தி னார். இதில், ஹீனியோ குன் விக்கெட்டை அண்டர்சன் வீழ்த்தியபோது, முதல்தர போட்டியில் ஆயிரமாவது விக்கெட்டை கைப்பற்றி அபாரமான சாதனையை நிகழ்த்தினார்.

கடந்த மாதம் மற்றொரு மைல்கல்லையும் அண்டர்சன் எட்டியிருந்தார். இங்கிலாந்து அணியில் அதிகமான டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய பெருமையை அலெஸ்ரெயர் குக் பெற்றிருந்தார். குக்




161 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி இருந்த நிலையில் நியூஸிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டி களில் அண்டர்சன் களமிறங்கி, குக்கின் சாதனையை முறியடித்து தனது 162 போட்டியை அண்டர்சன் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# விம்பிள்டன் ரென்னிஸ்: காலிறுதியில் ஆஷ்லே!

லண்டன், ஜூலை 07

விம்பிள்டன் ரென்னிஸின் காலிறுதி சுற்றுக்கு முதல்நிலை வீராங்கனையான ஆஷ்லே பார்டி காலிறுதி ஆட்டத்துக்கு முன்னேறியுள்ளார்.

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற விம்பிள்ட்ன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடக்கிறது. இதில் நேற்று முன்தினம் இரவு நடந்த பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு போட்டியில், அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்டி செக் குடியரசின் வீராங்கனையான பார்போராவை எதிர்கொண்டார்.

இந்த ஆட்டத்தில், 7 - 5, 6 -3 என்ற செற் கணக்கில் ஆஷ்லே பார்டி வெற்றி பெற்று முதன்முறையாக காலிறு திக்குத் தகுதி பெற்றார்.

மற்றோர் ஆட்டத்தில் தரவரிசையில் 13ஆவது இடத் தில் உள்ள செக்குடியரசு வீராங்கனை கரோலினா பிளிஸ்கோவா 6-2, 6-3 என்ற நேர்செற் கணக்கில் 65ஆம் நிலை வீராங்கனையான சாம்சோனாவாவை (ரஷியா) எளிதில் தோற்கடித்து முதல்முறையாக காலிறுதிக்குள் கால் பதித்தார். (ஐ)



# இந்தியா - இங்கிலாந்து டெஸ்ட்: ரசிகர்களுக்கு 100வீத அனுமதி!

லண்டன், ஜூலை 07

இந்தியா - இங்கிலாந்து இடையேயான முதல் டெஸ்ட் போட்டியில் ஓகஸ்ட் 4ஆம் திகதி தொடங்குகிறது. இந்தத் தொடரில் 100 வீத ரசிகர்களை மைதானத்தில் அனுமதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள இந்திய கிரிக்கெட் அணி அந்த நாட்டுக்கு எதிராக 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட உள்ளது. இரு அணிகளுக்கும் இடையேயான முதல் டெஸ்ட் போட்டி வரும் ஓகஸ்ட் 4ஆம் திகதி தொடங்கவுள்ளது.

இங்கிலாந்தில் தற்போது விளையாட்டு போட்டி களை காண 100 சதவீத ரசிகர்களுக்கு அனுமதி அளிக் கப்படவில்லை. கட்டுப்பாடுகளுடன் குறைந்த எண்ணிக்கையிலான ரசிகர்களே அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், 100வீத ரசிகர்களுக்கு அனுமதி அளிக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஐ)

# விம்பிள்டன் ரென்னிஸ்: சானியா இணை வெற்றி!

லண்டன், ஜூலை 07

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் இந்தியாவின் சானியா மிர்ஷா, ரோகன் போனண்ணா இணை வெற்றி பெற்றது.

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடக்கிறது. இதில் கலப்பு இரட்டையர் போட்டியில் சானியா, போபண்ணா இணை பிரிட்டனின் எமிலி வெப்லி, ஸ்மித் ஹைடன் மெக்ஹக் ஜோடியை எதிர்கொண்டது.

இதில் 6-3, 6-1 என்ற நேர் செற்களில் சானியா, போபண்ணா இணை வென்றது. 47 நிமிடங்கள் நீடித்த இந்தப் போட்டியில் வெற்றிபெற்ற சானியா இணை மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியது. (ஐ)



# விம்பிள்டன் ரென்னிஸ் காலிறுதியில் ஜொகோவிச்!



லண்டன், ஜூலை 07

விம்பிள்டன் ரென்னிஸின் காலிறுதி சுற்றுக்கு முதல்நிலை வீரரான சேர்பியாவின் நோவக் ஜொகோவிச் முன்னேறினார்.

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற விம்பிள்ட்ன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடக்கிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில், நடப்பு சம்பியனான நோவக் ஜொகோவிச் 20ஆம் நிலை வீரரான கிறிஸ்ரியன் ஹரினை சந்தித்தார்.

தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஜொகோவிச் 6-2, 6-4, 6-2 என்ற நேர்செற்றில் கிறிஸ்ரியன் ஹரினை தோற் கடித்து 12ஆவது முறையாக காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றோர் ஆட்டத்தில், உலக தரவரிசையில் 7ஆவது இடத்தில் இருக்கும் ரஷ்ய வீரர் அண்ட்ரே ரூபலெவ் 3-6, 6-4, 6-4, 0-6, 3-6 என்ற செற் கணக்கில் 48ஆம் நிலை வீரரான ஹங்கேரியின் மார்டோன் புகோவிச்சிடம் அதிர்ச்சி தோல்வி கண்டு வெளியேறினார். (ஐ)

### அமைச்சர் கம்மன்பிலவுக்கு எதிரான பிரேரணை:

# கை கொடுப்பதா? காலை வாருவதா? மதில்மேல் பூனையாக 'மொட்டு' கட்சி



கொழும்பு, ஜுலை 07

**"எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியால் அறிக்கையொன்று விடுக்கப்பட்டிருந்தது. அந்த நிலைப்பாட்டிலேயே கட்சி இன்றும் இருக்கின்றது. அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் கட்சி மட்டத்தில் இன்னும் தீர்மானம் எடுக்கப்படவில்லை."**

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. அறிவித்தார்.

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளும், சாகர காரியவசம் வழங்கிய பதில்களும் வருமாறு:-

கேள்வி:- வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்துக்கு எடுப்பதற்கான திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் உங்கள் கருத்து?

பதில்:- எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டதையடுத்து கிராம மட்டத்திலான எமது கட்சி உறுப்பினர்களின் பிரதிபலிப்பையே நாம் கட்சி என்ற வகையில் அறிக்கையாக வெளியிட்டோம். அதற்கான உரிமை எமக்கு உள்ளது.

தற்போதைய நிலைவரம் (நம்பிக்கையில்லாப் பிரேரணை) தொடர்பில் எமது கட்சித் தலைவர்களும், ஏனைய கட்சித் தலைவர்களும் கலந்துரையாடி தீர்மானம் எடுப்பார்கள்.

கேள்வி: அப்படியானால் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவா அல்லது எதிர்ப்பா என்று இன்னும் தீர்மானம் எடுக்கவில்லையா?

பதில்:- இல்லை. மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்துவதற்கும், அரசை நெருக்கடிக்குள் தள்ளுவதற்கும் இடையில் வித்தியாசம் உள்ளது. எனவே, எதிரணியின் பொறிக்குள் சிக்கி செயற்படுவதற்கு நாம் தயாரில்லை. அதேபோல் அன்று கட்சி எடுத்த நிலைப்பாட்டில் இன்றும் உறுதியாகத்தான் இருக்கின்றோம். அந்த நிலைப்பாடு மக்களுக்காக எடுக்கப்பட்டதே தவிர, எதிரணிக்காக எடுக்கப்பட்டது அல்ல.

கேள்வி:- அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கப்படும் என்ற உறுதியை கட்சி செயலாளர் என்ற வகையில் வழங்க முடியுமா?

பதில்:- இது தொடர்பில் எமது கட்சியின் தலைவர்கள், ஏனைய கட்சிகளின் தலைவர்களுடன் கலந்துரையாடி முடிவெடுப்பார்கள்.

கேள்வி:- எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டதையடுத்து நீங்களும் கடுமையான நிலைப்பாட்டில்தானே இருந்தீர்கள்?

பதில்:- நாட்டு மக்களுக்காக அன்று நாம் விடுத்த அறிவிப்பு சரி என்ற நிலைப் பாட்டிலேயே இன்றும் இருக் கின்றோம்.

கேள்வி:- உங்கள் வாக்கு எப்படி?

பதில்:- எமது கட்சி ஒழுக்கக்கட்டமைப்புள்ள கட்சியாகும். எனவே, கட்சித் தலைவர்கள் எடுக்கும் முடிவை நாம் ஏற்போம். அதனைப் பாதுகாப்போம். நாடு தற்போது நெருக்கடியான சூழ்நிலையில் உள்ளது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் குழம்பிய குட்டைக்குள் மீன்பிடிப்பதற்குச் சந்தர்ப்பவாதிகளுக்கு அனுமதி வழங்க முடியாது. மக்கள் ஆணையைப் பாதுகாப்போம். நாட்டு மக்கள் பக்கம் நின்று தீர்மானம் எடுப்போம்" - என்றார்.

கொரோனா நெருக்கடியால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு மேலும் சுமையை ஏற்படுத்தும் விதத்தில் எரிபொருள் விலை அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளமை ஏற்க முடியாது. எனவே, இந்நிலைமைக்குப் பொறுப்பேற்று துறைசார் அமைச்சர் பதவி விலக வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளர் கடந்த ஜுன் 12ஆம் திகதி கட்சியின் சார்பில் விசேட அறிக்கையொன்றை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ)

# ரவிக்கு எதிரான வழக்கு மீண்டும் விசாரணைக்கு



கொழும்பு, ஜுலை 07

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உட்பட பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்திருந்த வழக்கு ஒன்றை மீண்டும் இம்மாதம் 20 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க கொழும்பு மூவரங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் இடம்பெற்ற பிணைமுறி ஏலத்தின் போது 15 பில்லியன் ரூபா பணத்தை முறைகேடாக பயன்படுத்தியதாக குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கொரோனா பரவல் காரணமாக குறித்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

(இ)

## மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 01 - 11 - 1935 | 26 - 06 - 2021 |

### அந்தோனிப்பிள்ளை இம்மானுவேல்

(ஓய்வுபெற்ற முன்னாள் வாழைச்சேனை காகித தொழிற்சாலை முதன்மை தொழில்நுட்பவியலாளர்)

யாழ். சுண்டுக்குழியைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி வட்டக்கச்சி, ஜேர்மனி Stuttgart, கனடா Ottawa ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை இம்மானுவேல் கடந்த 26.06.2021 சனிக்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார், நெடுந்தீவைச் சேர்ந்த காலஞ்சென்ற வைத்திலிங்கம் அந்தோனிப்பிள்ளை – ஊர்காவற்துறையைச் சேர்ந்த மேரி யோசேப்பின் தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்ற மேரி தெரசா மாணிக்கசோதி அவர்களின் அன்புக் கணவரும், அன்றன் செல்வராஜா, டான்ஸ்டன் ஸ்டீவன்சன், Ingston உதயகுமார், வின்ஸ்டன் சூரியகுமார், இம்மாகுலேட் சத்தியா, அன்டோனெட் நித்தியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், Venetia, மேரி ரஞ்சிதமலர், பத்மா, Queen Shaila Patrick பிரகாஷ் குமார், ராஜ் Alexander ஆகியோரின் அன்பு மாமனாரும், தேரேசம்மா செபஸ்தியாம்பிள்ளை, தார்சிளம்மா (புஷ்பம்) Alfred, ராசிந்திரா அருளம்மா (Daisy) சண்முகநாதன், Rita செல்வமணி (இரஞ்சிதம்) அந்தோனிப்பிள்ளை, யேசுதாசன் அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், Sophia, Maria, Christopher, Natasha, Aruthy, Janathy, Emmey, Robson, Orinah, Lubinah, Sharon, Brendan, Evyn, Emily ஆகியோரின் பாசமிகு பாட்டனும், Amaya, Darya, Mikhali ஆகியோரின் நேசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**அன்ரன்(ராஜ்) - மகன்**
**Mobile : +14389351541**

தகவல்
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 07 - 03 - 1955 | 30 - 06 - 2021 |

### திருமதி வர்ணகுமாரி சிங்கராயர்

யாழ். ஊர்காவற்துறை நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், கனடா Brampton ஐ வதிவிடமாகவும் கொண்ட வர்ணகுமாரி சிங்கராயர் கடந்த 30-06-2021 புதன்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான ஜேம்ஸ் செல்வம் ரோஸலின் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான A. K. ஜோசப் மேரி அந்தோனிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், அந்தோணி ஜோசப் சிங்கராயர் அவர்களின் அன்பு மனைவியும், அஜந், ஸ்டீவ், அனுஷா ஆகியோரின் பாசமிகு தாயாரும், மிரியம் மேனாகுமாரி (மேனா) நீக்கலஸ், ஜெனாதேவி (ஜெனா) குருசுநாதர், அன்டன் ஜேம்ஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜோசப் கிறிஷ்டன், சரோ யோகநாதம், புஷ்பம் பெனடிக்ட், புனிதம் விஜேயபாலன், அன்டன் நியூட்டன், ஜெகநேசன், வக்சலா ஜேம்ஸ், குருசுநாதர் (குருசு) ஞானப்பிரகாசம், காலஞ்சென்றவர்களான அன்டன் றோய், ஜோசப் ஜோச், அல்ஸ்டன் தயாளராஜ் (தயாளன்) நீக்கலஸ் ஆகியோரின் அன்பு மைத்துனியும்,

டொறினா றோஜர்ஸ், Richard Despatie ஆகியோரின் அன்பு மாமியாரும், Adrian Rogers அவர்களின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

Viewing :
Tuesday, 06 Jul 2021 12:30 PM - 5:00 PM
Andrews Community Funeral Centre - Bramalea Chapel 8190 Dixie Rd, Brampton, ON L6T 5N9, Canada

Viewing :
Wednesday, 07 Jul 2021 9:30 AM - 10:30 AM
Andrews Community Funeral Centre - Bramalea Chapel 8190 Dixie Rd, Brampton, ON L6T 5N9, Canada

Mass:
Wednesday, 07 Jul 2021 11:00 AM - 12:00 PM
St. Marguerite d'Youville Parish 2490 Sandalwood Pkwy E, Brampton, ON L6R 3A4, Canada

Burial :
Wednesday, 07 Jul 2021 12:00 PM - 1:00 PM
Assumption Catholic Cemetery 6933 Tomken Rd, Mississauga, ON L5T 1N4, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
**குடும்பத்தினர்.**

*Contacts :*
**Anthony Joseph Singherayor (Yogaratnam) - Husband**
Mobile : +12892339332
**Miriam Menakumari(Mena) Nicholas - Sister**
Mobile : +16477627488
**Jenadevi (Jena) Kurusanather - Sister**
Mobile : +16475456261 Anton (Jeeva)
**James - Brother**
Mobile : +16472230432

## 13, 16ஆவது...

சபை தேர்தல்களை இலங்கை அரசு ஒத்திவைத்து விட்டது” என த.மு.கூ. தலைவர் மனோ கணேசன் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயிடம் தெரிவித்திருக்கின்றார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி தூதுக்குழு, இந்திய தூதுவருடன் நேற்று பேச்சு நடத்தியது. தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தலைமையில் பிரதி தலைவர் ராதாகிருஷ்ணன், வேலுகுமார் எம்.பி., உதயகுமார் எம்.பி., பொது செயலாளர் சந்திரா சாப்டர் ஆகியோர் இந்திய தூதுவர் கோபால் பாக்லே, துணை தூதுவர் வினோத் ஜேகப், அரசியல் செயலாளர் பானு பிரகாஷ் உள்ளிட்ட இந்திய தரப்பை ‘இந்தியா’ இல்லத்தில் சந்தித்தனர்.

இது தொடர்பில் கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளதாவது,

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் குழந்தைகள்தான் 13ஆம் திருத்தம், 16ஆம் திருத்தம் என்பவை ஆகும். இன்று இந்த இரண்டையும் இலங்கை அரசு கைவிட்டு விட்டது. 13ஆம் திருத்தம் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபை தேர்தல்களை இலங்கை அரசு ஒத்தி வைத்து விட்டது. இதேவேளை மாகாண சபைகளுக்கு உரிய பாடசாலைகளையும், வைத்தியசாலைகளையும் மத்திய அரசின் நிர்வாகத்துக்கு உள்ளே சட்டவிரோதமாக சுவீகரித்து கொண்டுள்ளது.

16ஆம் திருத்தம் மூலமாகத்தான் தமிழ் மொழிக்கு நிர்வாக மொழி, கல்வி மொழி, மக்கள் சபை மொழி, சட்டவாக்க மொழி, நீதிமன்ற மொழி என்ற சட்ட அந்தஸ்துகள் கிடைத்தன. இவற்றுக்கும் இந்தியாதான் காரணமாக அமைந்தது.

ஆகவே, 13ஐ பற்றி பேசும்போது, இந்திய அரசு 16 பற்றியும் இலங்கை அரசுடன் பேச வேண்டும். ஏனெனில், அதிகார பரவலாக்களை மட்டுமல்ல, இன்று மொழி உரிமையையும் இந்த அரசு பறித்துக் கொண்டு கொண்டு வருகிறது. நான் அமைச்சராக இருந்தபோது ஆரம்பித்த இரண்டாம் மொழி பயிற்றுநர்களுக்கு பயிற்சி அளித்து உருவாக்கும் திட்டத்தையும் இந்த அரசு நிறுத்தி விட்டது.

இதேபோல் இந்திய பிரதமர் எமது அழைப்பை ஏற்று மலையகம் வந்து வழங்கிய பத்தாயிரம் வீட்டு திட்டமும் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. இலங்கை அரசு இதை தாமதம் செய்கிறது. இதுவும் இந்திய அரசுக்கும், புதிய கிராமங்கள், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுக்கும் நமது ஆட்சியில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட திட்டமாகும்.

ஆகவே, இலங்கை அரசு, இந்திய அரசுடன் உடன்பட்ட இந்த திட்டங்களை வலியுறுத்த இந்த அரசுக்கு முழுமையான உரிமைகள் உள்ளன. இதை இந்தியா செய்ய வேண்டும். இதேபோல் தோட்ட தொழிலாளர்களின் நாட்சம்பளம் இழுபறியில் இருக்கிறது. நாள் சம்பளம் ஆயிரம் ரூபாய் என கூறிவிட்டு, வேலை செய்யும் நாட் களை தந்திரமாக கம்பனிகள் குறைத்து விட்டன.

இந்த பிரச்னைகள் தொடர்பான மேலதிக பேச்சுகளை நடத்த, தமிழ் முற்போக்கு கூட்டணி, பாரதம் சென்று இந்திய பிரதமர் நரேந்திர மோடி, தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆகியோரை சந்திக்க விரும்புகிறது. இவற்றுக்கு ஏற்பாடுகள் செய்து தர வேண்டும்.

சீனா இலங்கையில் வந்து நிலை கொண்டிருப்பது, இந்தியாவின் தேசிய பாதுகாப்பு பிரச்னை என்பது மட்டுமல்ல. சீனா இலங்கையின் பல்மொழி, பன்மத, பல்லின அடிப்படையை ஏற்றுக் கொள்ள மறுப்பதாக நாம் சந்தேகம் கொள்கிறோம். ஆகவே தமிழர்களை சீனா இலங்கையர்களாக ஏற்க மறுக்கின்றதா என நாம் கேட்கிறோம். ஆகவேதான், இலங்கையில் சீனா நிலைப்பெறலை தமிழர் நாம் சந்தகமாக பார்க்கிறோம் என்பதையும் இந்தியா புரிந்துக்கொள்ள வேண்டும்” என மனோ கணேசன் தெரிவித்தார்.

## அரசின்...

சட்டக்கோவை (திருத்த) சட்டமூலம், சித்திரவதை மற் றும் வேறு கொடூரமான, மனிதாபிமான மற்ற அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றுக்கெதிரான சமவாயம் (திருத்தம்) சட்ட மூலம், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான ஒரு கட்டளை மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிப்பது தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

அரசாங்கம் சித்திரவதைகளுக்கு ஒரு போதும் இடமளிக்காது என்று அமைச்சர் கூறியிருந்தார். இது நல்லதொரு கருத்து. ஆனால், செயல்பாட்டு ரீதியில் அது இருக்க வேண்டும். அத்துடன் பயங்கரவாத தடுப்புச் சட்டம் தொடர்பான திருத்தம் தொடர்பில் கூறும் போது இந்த சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் தொடர்பில் சிந்திக்க வேண்டும். உளவியல் ரீதியில் அவர்கள் சித்திரவதைக்கு உள்ளாகின்றனர். இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தாது நீண்ட காலத்திற்கு தடுத்து வைத்திருப்பது அவர்களுக்கு சித்திரவதை போன்றதே.

இது போன்ற விடயங்கள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் கவனம் செலுத்தியுள்ளது. இதனால் பொருளாதார தடை தொடர்பாக அவதானம் செலுத்துகின்றனர். நீங்கள் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் இருந்த 16 பேரை விடுதலை செய்ததுடன், உங்களின் ஆதரவாளர்களை மகிழ்விக்க கொலைக் குற்றத்தில் இருந்த ஒருவரையும் விடுதலை செய்துள்ளீர்கள். இவற்றை அவர்கள் பார்க்கின்றார்கள். நடப்பதை பார்க்கும் போது அரசாங்கம் நாளுக்கு நாள் வீழ்ந்து வருகின்றது. இப்போது வீழும் போது மனதை திடப்படுத்த முயற்சிக்கின்றீர்கள்.

தற்போது நீங்கள் விடுதலை செய்துள்ள 16 பேரில் சிலர் நீண்ட காலமாக சிறையில் இருந்தவர்கள் என்பதுடன், அவர்களின் தண்டனைக் காலம் நிறைவடைய இருந்தது. இதனால் அவர்கள் மேலும் காலத்திற்கு இருக்கக்கூடியவர்கள் அல்ல. இதனால் அவர்களை விடுதலை செய்யும் போது உங்களுக்கு தேவையான ஒருவரையும் விடுதலை செய்துள்ளீர்கள். இது தொடர்பாக சர்வதேசத்தினர் சிரிக்கின்றனர்.

இதேவேளை சி .ஐ.டி, சட்டமா அதிபர் திணைக்களம் என்பன சுயாதீனமாக இயங்கின. அதில் அரசியல் தலையீடுகளால் அவர்களின் சுயாதீனத்துவம் இல்லாமல் போயுள்ளது. நீங்கள் நியமிக்கும் குழுக்களின் மூலம் வழக்குகளை இல்லாமல் செய்யுமாறு கூறப்படுகின்றது. இவ்வாறான விடயங்களே சர்வதேச ரீதியில் நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் இது தொடர்பான குறைபாடுகளை தீர்த்துக்கொள்ள வேண்டும். இதேவேளை இழப்பீட்டு அலுவலகம் தொடர்பாக கூறும் போது கடந்த காலங்களில் இடம்பெற்ற பல்வேறு கலவரங்களின் போது சொத்துக்களை இழந்தவர்கள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்” என்றார்.

## பஸில் நாளை...

பஸில் ராஜபக்ஷ பாராளுமன்றம் வருவதற்காக, பொதுஜன பெரமுன கட்சியின் தேசியப்பட்டியல் உறுப்பினர் ஜயந்த கொட்டகொட நேற்ன்று எம்.பி.பதவியை துறந்தார். இதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு பஸில் ராஜபக்ஷவின் பெயர் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முன்மொழியப்பட்டுள்ளது.

இந்நிலையில் தேர்தல் ஆணைக்குழு இன்று காலை கூடுகின்றது. அதன் பின்னர் பஸிலின் பெயர் வர்த்தமானியில் வெளியாகும். (அ)

## பின்வரிசை...

கட்கிழமை நடைபெறும் என தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறவுள்ள இந்த சந்திப்பில், ஆளுங்கட்சியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களைக் கட்டம் கட்டமாக ஜனாதிபதி அழைத்து கலந்துரையாடவுள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசாங்கத்தின் அடுத்த கட்ட பயணம் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## காலாவதியான...

குற்றவியல் நடைமுறைச் சட்டம் உள்பட இலங்கையில் சட்டத் துறையைத் திருத்தும் பல வரைவுகள் குறித்து நேற்று பாராளுமன்றத்தில் நடந்த விவாதத்தின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் அடுத்த 9 மாதங்களுக்குள் 50 புதிய நீதிமன்றங்களை நிறுவவும், 76 புதிய நீதிபதிகளை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அலி சப்ரி கூறினார்.

கொழும்பில் உள்ள அனைத்து சிறைச்சாலைகளையும் ஹொரணவில் கட்டப்பட்டு வரும் புதிய சிறை வளாகத்துக்கு மாற்றும் திட்டம் குறித்தும் நீதி அமைச்சர் அலி சப்ரி தெளிவுபடுத்தினார்.

## உள்ளூராட்சி...

ஒப்பந்த அடிப்படையில் உள்ளூராட்சி அமைப்புகளில் பணிபுரியும் சுமார் 8 ஆயிரம் ஊழியர்களின் நிரந்தர நியமனத்தை விரைவுபடுத்துமாறு தனக்கும் பிரதமருக்கும் இடையிலான கலந்துரையாடலின் போது பிரதமர் அறிவுறுத்தினார் என அமைச்சர் கூறினார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நிதியமைச்சராக அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் முன்மொழிவை முன்வைக்கப்பார் என்றும் அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன் குறிப்பிட்டார்.

## அமெரிக்க...

என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இஸ்ரேல் எனும் நாடு உருவான விதத்தை நினைவில் கொண்டு இந்த விடயத்தில் அரசாங்கம் செயல்படவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தின் போதே பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு கூறினார்.

20ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக அனைத்து அதிகாரத்தையும் ஜனாதிபதியிடம் வழங்கிவிட்டு, நீதிமன்றம் உள்ளிட்டவற்றின் சுயாதீனம் குறித்து இங்கு விவாதித்து எந்தவொரு பலனும் கிடையாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

19ஆவது திருத்தச்சட்டத்தின் இல்லாது செய்தமையால் இன்று சர்வதேசத்தின் பகையை சம்பாதித்துள்ளதாகவும் லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டார்.

## மணல் கொள்ளை...

பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

அந்த பகுதியில் மணல் கொள்ளையில் கும்பல் ஒன்று ஈடுபட்டுள்ளதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் விரைந்தனர்.

அங்கு மணல் கொள்ளையில் ஈடுபட்ட கும்பலை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைது செய்ய முற்பட்டபோது , கொள்ளையர்கள் அவர்கள் மீது மணல் அள்ளுவதற்கு வைத்திருந்த உபகாரணங்களால் தாக்குதல் நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவத்தில் அதிரடிப் படையினர் நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

அதேவேளை தப்பி சென்றவர்களில் இருவரை துரத்தி மடக்கிப்பிடித்து அதிரடிப் படையினர் கைது செய்திருந்தனர்.

காயமடைந்த அதிரடிப் படையினர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும், மணல் கொள்ளை நடைபெற்ற இடத்தில் மீட்கப்பட்ட உழவு இயந்திரம் ஒன்றையும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் யாழ்ப்பாண பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், தப்பி சென்ற ஏனையவர்களைக் கைது செய்யவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர். (அ-03)

## சிறிதரன்...

பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் அண்மையில் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் தெரிவித்திருந்தார்.

அண்மையில் விளையாட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வந்ததும் இந்த நோக்கத்துக்காகவே என அவர் தெரிவித்திருந்தார்.

இருப்பினும், பிரதமரின் அலுவலகம் இதனை மறுத்துள்ளது.

“பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கூறியமை தொடர்பில் ஆராய்ந்ததில் இந்த குற்றச்சாட்டுகள் முற்றிலும் பொய்யானவை என்றும், நெடுந்தீவு அல்லது பழைய யாழ்ப்பாணம் கச்சேரி கட்டடத்தில் எந்த நிலத்தையும் எந்த வெளிநாட்டு நிறுவனத்துக்கும் விற்க எந்த நடவடிக்கையும் இல்லை என்றும் அதிகாரிகளால் எனக்குத் தெரிவிக்கப்பட்டது, ”என்று பிரதமரின் ஒருங்கிணைப்பு செயலாளர் காசிலிங்கம் கீதநாத் ருவிட் செய்துள்ளார்.

## நீண்ட நாட்களின்...

வர்த்தன தலைமையில் காலை 10 மணிக்கு கூடியது. பாராளுமன்றம் கூடிய சிறிது நேரத்தில் இரா.சம்பந்தன் சக்கர நாற்காலியில் பாராளுமன்ற உதவியாளர்களினால் சபைக்குள் அழைத்து வரப்பட்டார். ஆனால், சக்கர நாற்காலியில் வருகை தந்தால் எதிர்க்கட்சி தரப்பில் கடைசி வரிசையிலேயே அமர்ந்திருக்க முடியும் என்பதனால்தான் தனது ஆசனத்தில் அமர வேண்டுமென சம்பந்தன் கூறியதனால் அவரை வெளியே அழைத்து சென்ற பாராளுமன்ற உதவியாளர்கள் மீண்டும் அவரை கைத்தாங்கலாக சபைக்குள் அழைத்து வந்தனர்.

தனது ஆசனத்துக்கு வருவதற்கு சம்பந்தன் பெரும் சிரமப்பட்டே வந்தார். சம்பந்தன் உள்ளே வரும் போதே அவரின் ஆசனத்துக்கு பக்கத்து ஆசனக்காரரான ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே வந்து அமர்ந்திருந்தார். அவர் சம்பந்தன் வருவதனை அவதானித்து அவருக்கு உதவும் வகையில் சம்பந்தன் அமர வசதியாக அவரின் ஆசனத்தை ஒழுங்குபடுத்திக்கொடுத்தார்.

சம்பந்தன் தன் ஆசனத்துக்கு வந்ததும் சபாநாயகருக்கு தலை வணங்கி மரியாதை கொடுத்து விட்டே தனது ஆசனத்தில் அமர்ந்தார். பின்னர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சிறிது நேரம் பேசிவிட்டு அதனையடுத்து சுமந்திரன் எம்.பி.யை அழைத்து தனக்கு அருகில் அமர வைத்து ஏதோ பேசிக்கொண்டிருந்தார்.

## யாழ். நகரில்..

நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்!, கொரோனா தடுப்பூசியை அனைவருக்கும் வழங்கி இயல்பு வாழ்வுக்கு வழி செய்!, அனைத்து அரசியல் கைதிகளையும் உடனே விடுதலை செய்! ஆகிய பிரதான கோரிக்கைகளை முன்வைத்து மக்கள் கவனவீர்ப்புப் போராட்டம் எதிர்வரும் சனிக்கிழமை மு.ப. 9.30 மணியளவில் யாழ். பிரதான பஸ் நிலையத்துக்கு முன்பாக இடம்பெறவுள்ளது.

அரசியல் கட்சிகள், வெகுஜன அமைப்புகள், விவசாய சம்மேளனங்கள், மீனவர் சங்கங்கள், இளைஞர் அமைப்புகள், சூழலியல் செயல்பாட்டாளர்கள், சமூக நலன்விரும்பிகள், கல்வியாளர்கள், மாணவர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் இதில் பங்குகொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி இடம்பெறவுள்ள இந்தப் போராட்டத்தில் அனைவரையும் இணைந்துகொள்ளுமாறு இதன் ஏற்பாட்டாளர்களுள் ஒருவரான புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியின் வட பிராந்திய செயலாளரும், வலி. கிழக்கு பிரதேச சபையின் உறுப்பினருமான செல்வம் கதிர்காமநாதன் அழைப்பு விடுத்துள்ளார்.

ஈழநாடு
Eelanadu

# சீன கம்யூனிஸ்ட் கட்சி நூற்றாண்டை முன்னிட்டு புதிய நாணயம் வெளியீடு



கொழும்பு, ஜூன் 07

இலங்கை அரசாங்கத்துக்கும் சீன மக்கள் குடியரசுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 65 ஆவது ஆண்டு நிறைவு மற்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 100ஆவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு, வெளியிடப்பட்ட புதிய 1,000 ரூபாய் நாணயம், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ. டி. லக்ஷ்மனினால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு, நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்த நினைவு நாணயமானது, இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் பரஸ்பர உறவுகளுக்கான விசேட கௌரவமாக வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

நாணயத்தின் ஒரு பக்கத்தில் இலங்கை மற்றும் சீனாவின் தேசிய கொடிகளுடன், தாமரைத் தடாகம் மஹிந்த ராஜபக்ஷ கலையரங்கின் முன் பக்கத் தோற்றமானது, நாணயத்தின் மத்தியில் காட்சியளிக்கிறது. கலையரங்குக்குக் கீழே பெரிய இலக்கத்தில் 2022 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் ”இலங்கை - சீனா 65 ஆண்டுகள்” என்றும் நாணயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாணயத்தின் மறுபக்கத்தில் 1,000 ரூபாய் மற்றும் “சீன கம்யூனிஸ்ட் கட்சி” என மும்மொழிகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. 500 தங்க நாணயங்களும் 2000 வெள்ளி நாணயங்களும் இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளன வென மத்திய வங்கி அறிவித்துள்ளது.

# சமூகப் பணியாளர் யோகநாதன் கொரோனா தொற்றால் மரணம்!



யாழ்ப்பாணம், ஜூலை 07

யாழ். சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் நிர்வாக இயக்குநர் சொக்கநாதன் யோகநாதன் தனது 73 ஆவது வயதில் நேற்றுமுன்தினம் அதிகாலை யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றால் மரணமடைந்துள்ளார்.

அமரர் யோகநாதன் யாழ். சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் ஊடாக யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு கிளிநொச்சி, வவுனியா முதலான மாவட்டங்களில் வதியும் போரினால் பாதிப்புற்ற ஏழைத் தமிழ் மாணவர்களுக்கு உதவும் வெளிநாடுகளிலிருந்து இயங்கும் தன்னார்வத் தொண்டர் அமைபுகளின் தொடர்பாளராகவும் அர்ப்பணிப்புடன் இயங்கியவர்.

அன்னாரின் திடீர் மறைவு ஈடுசெய்யமுடியாத இழப்பு என்று அவுஸ்திரேலியாவிலிருந்து இயங்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியம் தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலை 3.30 மணிக்கு மறைந்த யோகநாதனின் இறுதி நிகழ்வுகள் அன்றைய தினமே முற்பகல் 11.30 மணிக்கு நடைபெற்றது.

சமூக இடைவெளி பேணலுடன் நிகழ்ந்த இந்த இறுதி நிகழ்வில் யாழ். சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் நிர்வாகப் பணியாளர் செல்வி காயத்திரி தங்கராசா மற்றும் கணக்காளர் பொன்னம்பலம் தினேஷ் ஆகியோர் மாத்திரம் கலந்துகொண்டனர். (இ)

# அலாவுதீனின் அற்புத விளக்கே பஸில்!

## எதிரணியின் விமர்சனங்களுக்கு அமைச்சர் சந்திரசேன இப்படி பதில்

கொழும்பு, ஜூலை 07

“அலாவுதீனின் அற்புத விளக்கு போன்றே பஸில் ராஜபக்ஷவின் பாராளுமன்ற வருகையை ஆளுங் கட்சி பார்க்கின்றது.”

- இவ்வாறு அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

பஸில் ராஜபக்ஷவின் பாராளுமன்ற வருகை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

”பஸில் ராஜபக்ஷ பாராளுமன்றம் வருவதால் ஏற்படவுள்ள மாற்றம் என்ன, அவர் என்ன அலாவுதீனின் அற்புத விளக்குடனா வருகின்றார் என எதிரணி உறுப்பினர்கள் விமர்சனம் செய்கின்றனர்.

எம்மைப் பொறுத்தவரையில் பஸில் ராஜபக்ஷவின் வருகையையே நாம் அலாவுதீனின் அற்புத விளக்காகவே பார்க்கின்றோம். அவர் பாராளுமன்றம் வந்து, அமைச்சுப் பதவியை ஏற்பது எமக்குப் பெரும் பலமாக அமையும். எனவே, பஸிலின் வருகையைத் தடுக்கவே எதிரணி இப்படியெல்லாம் விமர்சனங்களை முன்வைக்கின்றது” - என்றார்.

அதேவேளை, பஸில் ராஜபக்ஷ பாராளுமன்றம் வருவதால் அரசியலில், பொருளாதாரத்தில் பெரிதாக எவ்வித மாற்றமும் ஏற்படப்போவதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தி விமர்சித்துள்ளது. (இ)

# ஏப். 21 பாராளுமன்றில் நடந்த சம்பவம் தொடர்பான அறிக்கை சபாநாயகரிடம்

கொழும்பு, ஜூலை 07

2021 ஏப்ரல் 21ஆம் திகதி பாராளுமன்றத்தின் சபா மண்டபம் மற்றும் பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் ஆராய்ந்து அதற்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்த பரிந்துரைகளை முன்வைப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை அதன் தலைவர் பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று முற்பகல் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் கையளித்தார்.

இந்தக் குழுவின் உறுப்பினர்களாகச் செயற்பட்ட அமைச்சர் சமல் ராஜபக்ஷ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா, இக்குழுவின் செயலாளராகச் செயற்பட்ட பாராளுமன்றத்தின் உதவிச் செயலாளர் நாயகம் டிக்கிரி ஜயதிலக ஆகியோரும் இந்தச் சந்தர்ப்பத்தில் இணைந்துகொண்டிருந்தனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த இக்குழுவின் தலைவர் பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, இதுபோன்ற சம்பவங்களினால் ஒட்டுமொத்த பாராளுமன்றத்திலும் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் குறித்து விரிவாக ஆராய்ந்த குழு, எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்களைத் தடுப்பதற்கான நீண்டகால மற்றும் குறுகியகால நடவடிக்கைகள் அடங்கிய பரிந்துரைகளையும் இந்த அறிக்கையில் உள்ளடக்கியிருப்பதாகக் கூறினார்.

ஏப்ரல் 21ஆம் திகதி ஏற்பட்டது போன்று குழப்பமான சூழ்நிலை மீண்டும் பாராளுமன்றத்தில் ஏற்படாதிருப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதைப் பரிந்துரைப்பதற்காக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவினால் கடந்த ஏப்ரல் 23ஆம் திகதி இந்தக் குழு நியமிக்கப்பட்டது.

அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, கெஹலிய ரம்புக்வெல இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, பாராளுமன்ற உறுப்பினர்களான அநுர பிரியதர்ஷன யாப்பா, இம்தியாஸ் பாக்கீர் மாக்கர், ஆர்.எம்.ரஞ்சித் மத்துமபண்டார, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாகச் செயற்பட்டனர். (இ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.07.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு



7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)
**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-வருத்தப்படாத வாலிபர் சங்கம், 3 திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-10 திரைப்படங்களின் தரவரிசை



**இரவு**
7.00 மணி : பாரதீ
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
10.00 மணி : நேருக்கு நேர்

DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

ஓம் டிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்